Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 097 | புதன்கிழமை | மாசி 19 ஆம் நாள் 03 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## ஆசிரியைகள் உட்பட 9 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடக்கு மாகாணத்தில் மேலும் 9 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து 19

# இரணைதீவில் உடல்கள் அடக்கம்; தமிழ், முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்பு!

### முஸ்லிம்களின் மையவாடிகளில் அடக்கம் செய்ய அனுமதிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணை தீவில், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ள நிலையில் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பவை ஓரணியில் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. 19

## இரணைமாதா நகரில் இன்று போராட்டம்!

விரிவு 04 பக்கம்

# தொற்றாளரின் ஜனாஸாக்களை புதைக்க இரணைதீவு தெரிவு

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவுப் பகுதியில் அடக்கம் செய்வதற்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக் 19

## கொடிகாமம் வர்த்தகருக்கு கொரோனா

*எழுமாற்று சோதனையில் கண்டறிவு*

யாழ்ப்பாணம், மார்ச் 3

கொடிகாமம் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் வர்த்தகர் ஒருவருக்குத் தொற் 19


## ஐ.நாவின் தீர்மானம் தொடர்பான த.தே.கூ. நிலைப்பாடு விரைவில்!

### சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட் டுள்ள வரைவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அறிக்கை விரைவில் வெளியாகும்.

இவ்வாறு தமிழ்த் 19





## நீதி வேண்டி நல்லூரில் திரள்கின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி 19

## 8 மாதக் குழந்தை சித்திரவதை தாய் பொலிஸாரால் கைது!

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

8 மாதங்கள் நிரம்பிய குழந்தையை அடித்துத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் குழந்தையின் தாய் கைதுசெய்யப்பட் 19



## விபத்தில் சிக்கி முதியவர் சாவு

வவுனியா, மார்ச் 3

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது-56) என்ற முதிய 19

## மூத்த பத்திரிகையாளர் ஷண் நேற்று மறைவு!

கொழும்பு, மார்ச் 3

மூத்த ஊடகவியலாளர் எஸ்.சண்முகராஜா (ஷண்) தனது 85 ஆவது வயதில் நேற்று 19

## சாதாரண தரம் ஒகஸ்டில் உயர்தரம் டிசெம்பரில்

கொழும்பு, மார்ச் 3

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒகஸ்ட் மாதத்திலும், உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்திலும் நடத்தும் புதிய யோசனைக்கு அனுமதியைப் பெற, அமைச்சரவையில் 04

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் உக்கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)'




நிரந்தர நியமனம் வழங்குமாறு

# சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றும் எங்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்றும் நிர்க்கதியாக நிற்கும் சுகாதாரத் தொண்டர்களாகிய எங்களுக்கு உரிய தீர்வை வழங்கும்படி, பல தடவைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரையில் எந்தவித மான நடவடிக்கையும் எவரும் எடுக்கவில்லை. சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் அரசியல் தலையீடு வேண்டாம். எமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் - என்றனர். (ம-20)

## போர்க்கால பாதிப்புக்கான இழப்பீடு பிரதேச செயலகங்களில் பெறலாம்

சாவகச்சேரி, மார்ச் 3

போர்க் கால இழப்பீட்டுக் காசோலைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறிய பயனாளிகள், அந்தந்தப் பிரதேச செயலங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து மேற்படி இழப்பீட்டுக்காக விண்ணப்பித்த பொதுமக்கள், அரச பணியாளர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு காசோலைகள் அனுப்பப்பட்டுள்ளன.

மாவட்டச் செயலகத்தில் வைத்து பாதிக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு நேற்றுமுன்தினம் காசோலைகள் வழங்கப்பட்டன. அங்கு தமது காசோலையைப் பெறுக் கொள்ளாதவர்களுக்குரிய காசோலைகளே அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-ப-9)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியவருக்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் நேற்று முன்தினம் விதிக்கப்பட்டது.

யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மேற்படி தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-ற-319)

## அரசை அழிக்க முயல்வோரை நிச்சயம் நாம் விரட்டியடிப்போம்

பஸில் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 3

இது நாங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கிய அரசு. இம்முறை குகையை உடைத்துக்கொண்டு வெளியில் சென்று அரசை அழிக்க எவராவது முயற்சித்தால் நாங்கள் அதற்கு இடமளிக்க மாட்டோம். குகையை உடைத்துக்கொண்டு வெளியேறும் வரை இம்முறை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவும் மாட்டோம். அவர்களை முன்கூட்டியே விரட்டி விடுவோம். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

ஹைனா என்ற விலங்கு ஆபிரிக்க நாடுகளில் இருக்கின்றது. ஹைனா என்ற இந்த விலங்குகள் எப்போதும் சிங்கத்தின் பின்னாலேயே திரிபவை. இந்த விலங்குகளுக்கு தனியாக வேட்டையாட முடியாது என்பதே இதற்குக் காரணம்.

சிங்கம் வேட்டையாடும் உணவின் ஒரு பகுதியை கொள்ளையிடும் பழக்கம் ஹைனாவுக்கு இருக்கின்றது. வாய்ப்புக் கிடைத்தால் சிங்கத்தையும் ஹைனா கொன்று சாப்பிடக்கூடிய விலங்கினம். அன்றாட உணவை தேடிக்கொள்ளுமே தவிர, ஹைனாவால் காட்டில் எந்த புரட்சியையும் செய்ய முடியாது' - என்றார். (எ-22)

## 4,245 ஏக்கர் காடு விரைவில் விடுவிப்பு!

வவு. அபிவிருத்திக் குழுவில் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 3

வவுனியா பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 4 ஆயிரத்து 245 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காடு விரைவில் விடுவிக்கப்படவுள்ளது என்று வனவளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று மதியம் இடம்பெற்றது. இதில் வளவளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்ததாவது. வவுனியா பிரதேசத்துக்கு உட்பட்ட வகையில் 4 ஆயிரத்து 245 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள அரச காட்டுப் பகுதிகளை விரைவில் விடுவிக்கவுள்ளோம். இது தொடர்பாக மாவட்ட செயலருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்- என்றனர். (ம-110)

## ஹெரோய்ன் வைத்திருந்த பெண்ணுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

120 மில்லி கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த பெண்ணுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த வழக்கு யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ம-வ-319)



தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர் நாட்டில் வசித்து வருகின்ற சரவணமுத்து ஜெயகாந்தனின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு நேசன் குடியிருப்பு மற்றும் வேணாவில் ஆகிய கிராமங்களில் பொருண்மியம் நலிந்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் வயோதிபர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள், பால்மா மற்றும் பழவகைகள் என்பவை வழங்கப்பட்டன. (ச-222)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில்

## ஐ.தே.கவை சேர்ந்த சிலரையும் இணைத்துச் செயற்படும் ஐ.ம.ச.

ரஞ்சித் மத்தும பண்டார அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

ஊழல், மோசடியற்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களையும் இணைத்து, மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான எமது கட்சி தயாராகவே உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு சட்டத்தில் சிறு மாற்றத்தையே செய்ய வேண்டும். அதனை விரைவில் செய்து தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தலைச் சந்திக்க நாம் தயார். அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எமது அணி பலமாக உள்ளது. தேர்தலை வைத்தால் இது தெளிவாகத் தெரியும் - என்றார். (க-44)

## கோத்தாவுடைய வெற்றிக்கு சுதந்திரக்கட்சியும் காரணம்

தயாசிறி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 3

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஒத்துழைப்பு இல்லாதிருந்தால், ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவால் வெற்றிபெற்றிருக்க முடியாது என்று கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

'ஜனாதிபதித் தேர்தலில் எமது கூட்டணி 69 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது. இதில் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளை எமது சுதந்திரக்கட்சியே பெற்றுக் கொடுத்தது. குறைந்தபட்சம் 4 லட்சம் வாக்குகளைக் கூட நாம் பெற்றுக்கொடுக்கவில்லை என்று எவராலும் கூறமுடியாது. எனவே, எமது ஆதரவு இல்லையேல் வெற்றிபெற்றிருக்க முடியாது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இது தொடர்பில் அமைப்பாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். கிராமத்தில் வீதியொன்றைக் கூட அமைக்க முடியவில்லை. அதனை மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் செய்கின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும் என்றே வலியுறுத்துகின்றோம்.

அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்வதாக இருந்தால், அது குறித்து 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் முடிவெடுக்க முடியாது. பிரதேச அமைப்பாளர்களுடன் கலந்துரையாடி நிறைவேற்றுக்குழுவே முடிவெடுக்க வேண்டும்.

அதேவேளை, சட்டத்தரணி சங்கத்தின் தேர்தலானது அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகப் பார்க்கலாம். அரசுக்கு சிறு பின்னடைவு ஏற்பட்டுள்ளதை உணர முடிகின்றது. எனவே, தவறுகளைத் திருத்திக் கொண்டு பயணிக்க வேண்டும்' - என்றார். (க-44)

# கூட்டமைப்பிடம் வடக்கு, கிழக்கு; தமிழீழத்தை கொடுப்பது போன்றதே!

## எச்சரிக்கிறார் சரத் வீரசேகர தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 3**



**பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை அவசரப்பட்டு நடத்தி வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அரசு வழங்கக் கூடாது. தனித் தமிழீழம் உருவாக இடமளிக்கக்கூடாது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் அல்லது புதிய முறைமையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் அல்லது புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்ட பின்னர் அதில் தெரிவிக்கப்படும் பரிந்துரைக்கமைய மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். இது ஜனாதிபதியிடம் நான் முன்வைக்கும் பணிவான வேண்டுகோள்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் தேர்தலொன்று தேவையற்ற விடயம். இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அல்லது ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் மிரட்டல்களுக்கு அஞ்சி இலங்கையில் அவசரப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது என்ற செய்தி வெளியில் வரக்கூடாது. இதைக் கவனத்தில்கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அரசு செயற்பட வேண்டும், என்றார். (ஒ,5,22)

---

## ஈஸ்டர் தாக்குதல்

# தண்டனைகளைத் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை

கொழும்பு, மார்ச் 3



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு, தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கான தண்டனைகளை தீர்மானிப்பதற்கான அதிகாரமில்லை என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து வருகின்றது. கூடிய விரைவில் பொதுஜன பெரமுன தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் நிலைப்பாட்டுக்கும் அரசின் நிலைப்பாட்டுக்கும் வேறுபாடு உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவுக்கு நீதித்துறை அதிகாரங்கள் இல்லாததால், அது தண்டனைகளைப் பரிந்துரை செய்ய முடியாது. ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளை சுமத்துவார். நீதிமன்றமே தண்டனைகளைத் தீர்மானிக்கும்.

குறிப்பிட்ட அறிக்கையின் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களமும் சி.ஐ.டியினரும் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். அறிக்கை முழுமையானதாக இல்லை. ஆனால் முக்கியமானது. என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

---

# சர்வதேச உறவில் நெறி தவறும் அரசு

கொழும்பு,மார்ச் 3

நிதி, சுற்றாடல் உள்ளிட்ட வேறு பல விடயங்களில் சர்வதேசத்துடன் இணைந்து செயற்படுவதில் இலங்கை அரசுக்கு எந்த ஆட்சேபனையும். இல்லை. ஆனால் மனித உரிமைகள் விடயத்தில் மாத்திரம், சர்வதேச அமைப்புக்களைக் குறைகூறுகின்றது. இது நாட்டின் சுயாதீனத்துக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறு முன்னிலை சோசலிஸக் கட்சியின் பிரசாரச்செயலாளர் புபுது ஜயகொட குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் போர் முடிவடைந்து சுமார் 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அது குறித்த பொறுப்புக்கூறலை நிறைவேற்றுதற்கு அரசு தவறியுள்ளது. நாட்டில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச பொறிமுறையொன்றை நிறுவுவது குறித்து தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை மீதான முதலாவது வாக்கெடுப்பின் போது அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் வாக்களித்திருக்கின்றன.

எனினும் சீனா, ரஷ்யா, வியட்நாம், லாவோஸ், கியூபா போன்ற நாடுகள் அறிக்கைக்கு எதிராக வாக்களித்துள்ளன. பாகிஸ்தான், மாலைதீவு போன்ற முஸ்லிம் நாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும் அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளன.

இந்த விடயத்தில் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் நடுநிலை வகிப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் நியாயமற்றவை. அவை மேற்குலக நாடுகளின் தேவைக்கேற்பவே செயற்படுகின்றன என்று எமது அரசு குறைகூறுகின்றது.

எனினும் சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக ஸ்தாபனம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அவ்வாறான சர்வதேச அமைப்புக்களுடனேயே தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றது.

ஆனால் நாட்டின் பிரஜைகளைப் படுகொலை செய்தல் மற்றும் துன்புறுத்துதல் ஆகிய விடயங்களில் மாத்திரம் நாட்டுக்குள்ளேயே தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே அரசு கொண்டிருக்கிறது - என்றார். (க-இ)

---

# தமிழர்களை மீண்டும் பலிக்கடா ஆக்காதீர்கள்

## கோருகிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்,மார்ச் 3



தமிழ் மக்களை மீண்டும் சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றி பேசுபவர்கள், தாங்களும் ஓரளவுக்கேனும் அவற்றை மீறாமல் செயற்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி. அவர் அனுப்பிவைத்துள்ளஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டியவர்கள் திசை மாறிப் பயணிப்பதால், மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. தமிழ்த் தேசியம் பேசுகின்ற ஒவ்வொரு தரப்பினரும் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், இழந்த இடத்தை மீண்டும் பெறுவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்பாவி மக்கள் மற்றும் தமிழ்த் தலைவர்களின் படுகொலையை நியாயப்படுத்தியவர்கள் மற்றும் அதனைத் தட்டிக்கேட்காதவர்கள் எவ்வாறு ஐ.நாவில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைப் பற்றிப் பேச முடியும்? என்றுள்ளது. (க-இ)

---

# சுகாதார விதிகளை மீறாதீர்; அதிக ஆபத்து உங்களுக்கே!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 3

நாட்டில் கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் நடைமுறையில் உள்ள சுகாதார விதிமுறைகளை மீற வேண்டாம். அதேவேளை தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் சட்ட விதிகளை முறையாகப் பேணுங்கள். இவற்றைக் கருத்தில் கொள்ளத் தவறினால் அதிக ஆபத்து உங்களைத் தேடி வரும். இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகள் மீறப்படுகின்றன. முகக்கவசம் அணிதல் மற்றும் தனிநபர் இடைவெளியை பேணல் போன்ற சட்டவிதிகளை சிலர் கடைப்பிடிப்பதில்லை. எனினும் பொலிஸார் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சட்ட விதிகளுக்குப் புறம்பாகச் செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (க-இ)

---

# இராஜதந்திரம் இல்லாவிடில் இலங்கை தனிமைப்படும்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 3

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதிக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்படவுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள இராஜதந்திரரீதியில் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால், சர்வதேசத்தில் இலங்கை தனிமைப்படுத்தப்படும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தனாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை பிரதானமாகப் பேசப்படுகிறது. இந்த அறிக்கை மூலம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நெருக்கடியானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. உலகத்தின் மத்தியில் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் ஒரு நிலைமை உருவாகியுள்ளது. இந்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இறுதிக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் இலங்கைக்குச் சார்பாகவும், எதிராகவும், நடுநிலையாகவும் உலக நாடுகள் வெவ்வேறு நிலைப்பாடுகளைத் தெரிவித்திருந்தன.

இது தொடர்பில் ஆராய்வதற்கும், ஐக்கிய மக்கள் சக்தி, நிபுணர்கள் குழுவொன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் எமது நிலைப்பாடு அறிவிக்கப்படும் - என்றார். (ற-இ)

# ஆட்டம் காணுமா அரசின் 2/3 பெரும்பான்மை பலம்?

## தனிவழி பயணத்துக்கு தயாராகிறது சு.க.

**கொழும்பு, மார்ச் 3**

**சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி அரசிலிருந்து தமது கட்சி வெளியேறவேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர், கட்சி தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

தேர்தல் காலங்களில் சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவற்றையும் சிறிலங்கா பொதுஜன பெரமுன உரிய வகையில் நிறைவேற்றவில்லை எனவும், கட்சியை ஒடுக்கும் செயல்கள்கூட தற்போது மறைமுகமாக இடம்பெற்று வருகின்றன எனவும் சுட்டிக்காட்டியே மேற்படி வேண்டுகோளை முன்வைத்துள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

எனினும், சுதந்திரக் கட்சியிலுள்ள மற்றுமொரு தரப்பு, அரசிலிருந்து வெளியேறுவதற்கு விரும்பவில்லை. அவ்வாறு முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது. குறிப்பாக அரசுக்குள் இருந்து கொண்டே போராடவேண்டும் எனவும், 21/4 தாக்குதல் அறிக்கையை மையப்படுத்தி வெளியேறுவது தவறான விம்பத்தை உருவாக்கும் எனவும் எனவும் அந்த தரப்பு கருத்து வெளியிட்டு வருகின்றது.

இதனால் ஏற்கனவே உடைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி, எதிர்காலத்தில் மேலும் இரு அணிகளாக பிளவடையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளும் பட்சத்தில், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை அரசு இழக்க நேரிடும்.

இவ் வருடத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, சுதந்திரக் கட்சி தீர்க்கமானதொரு முடிவை எடுக்கும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இதற்கிடையில் விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினரும் மொட்டுக் கட்சிக்காரர்கள் மீது அதிருப்தியிலேயே இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

### சாதாரண....

அடுத்த வாரம் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு இடையிலான கலந்துரையாடல் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. அதில் கல்வி அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்தார். கலந்துரையாடல் தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

சுகாதார சேவை மற்றும் மருத்துவர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்குத் தீர்வு காணல் தொடர்பில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் முன்வைத்த யோசனைகள் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டன. அரச மருத்துவபீடத்தில் இருந்து 28 தொடக்கம் 30 வரையிலான வயதுடையவர்கள் மருத்துவ சேவையில் ஈடுபடுகின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் அனுருத்த பாதெனிய சுட்டிக்காட்டினார்.

அதைக் கவனத்தில் எடுத்த பிரதமர், அரச மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகும் மருத்துவர்களின் வயதெல்லையை 22 தொடக்கம் 23 ஆகக் குறைக்க கல்வி அமைச்சுடன் இணைந்து ஒன்றிணைந்த செயற்றிட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஓகஸ்ட் மாதத்திலும், உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்திலும் நடத்துவதன் மூலம், மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகச் செலவிடும் 9 மாதங்களைக் குறைத்துக்கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதன்போது குறிப்பிட்டார்.- என்றுள்ளது. (க-இ)

# பன்றித்தலைச்சி கண்ணகையில் இம்முறை இடம்பெறுமா பொங்கல்?

## இன்று முடிவு

சாவகச்சேரி, மார்ச் 3

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயம் உட்பட, கோவில்களில் இவ் வருடம் பங்குனித் திங்கள் பொங்கல். உற்சவம் இடம்பெறுவது தொடர்பில் இன்று இடம்பெறும் கலந்துரையாடலை அடுத்தே முடிவு தெரியவரும் என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் உள்ளிட்ட அனைத்து இந்துக் கோவில்களிலும் கடந்த வருடம் முதலாவது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் மட்டும் நடைபெற்றது.

அடுத்த மூன்று திங்கட்கிழமைகள் கொரோனா அச்சம் காரணமாக பொங்கல் உற்சவம் இடைநிறுத்தப்பட்டது. பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பொங்கல் நேர்த்திகளைச் செய்ய பெருமளவானோர் வருகின்றனர்.

கொரோனா அச்சம் காரணமாக கடந்த வருடம் திடீரென உற்சவம் நிறுத்தப்பட்டதால் பெருமளவு அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இவ்வருடம் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெறுமா என அடியார்கள் பலர் கேட்டனர்.

இது தொடர்பாக பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

ஆலய உற்சவம் தொடர்பில் நாளை (இன்று) சுகாதாரப் பிரிவினருடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அந்தக் கலந்துரையாடலின் பின்னரே இவ்விடயம் தொடர்பில் முடிவு எடுக்கப்படும். உற்சவங்களை எவ்வகையில் நடத்துவது என்பது தொடர்பாக சுகாதார பகுதியினர் முடிவு செய்வர் என்றார்.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 22 , 29ஆம் திகதிகளிலும், ஏப்ரல் மாதம் 5 ,12ஆம் திகதிகளிலும் நடைபெறுமென பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-9)



# வவு. பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று

வவுனியா, மார்ச் 3

2021 ஆம் ஆண்டுக்கான வவுனியா பிரதேச செயலகத்தின் முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், நகரசபை தலைவர் இ.கௌதமன், பிரதேசசபைத் தலைவர் து.நடராயசிங்கம், உதவி பிரதேச செயலாளர் சு.பிரியதர்சினி இராணுவ அதிகாரிகள், பொலிஸார், அரச திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதி கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-110)

# இரணைமாதா நகரில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 3

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை இரணைதீவில் அடக்கம் செய்ய எடுக்கப்பட்டுள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 9 மணிக்கு இரணைமாதா நகர் கடற்கரையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில இரணைதீவு பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதர் தெரிவித்துள்ளதாவது-

அரசின் இந்தத் தீர்மானத்துக்குக் கடுமையான எதிர்ப்பை நாம் தெரிவிக்கின்றோம். மக்களின் நலனுக்காகவே இதனை எதிர்க்கின்றோம். இரணைதீவில் 2018ஆம் ஆண்டுதான் இங்கு மக்கள் குடியமர்ந்தனர். நூறுக்கும் அதிக குடும்பங்கள் வசிக்கின்றனர். இன்னமும் சமூக நிலைமை அங்கு இல்லை.

அடிப்படை வசதிகள் எதுவும் அங்கு ஏற்படுத்தப்படாத நிலையில் தற்போது அரசு எடுத்துள்ள முடிவு கவலை தருகின்றது. இதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இது நீரோட்டம் நிறைந்த தீவு. இப்போது 135 அட்டை பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு உடல்களை அடக்கம் செய்வது ஏற்புடையது அல்ல. இது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரான தீர்மானம் அல்ல. அரசு இந்தத் தீர்மானத்தைக் கைவிடும்வரை எமது போராட்டம் தொடரும்.- என்றார். (எ-இ)

# சட்டவிரோத மணல் அகழ்வு; சூழலுக்கு பெரும் ஆபத்து

## கற்சிலைமடு பொது அமைப்பு எச்சரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 3

முல்லைத்தீவு பேராறில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக பெரும் சூழலியல் ஆபத்து ஏற்பட்டுள்ளது என கற்சிலைமடு பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்ததாவது,

இந்த மணல் அகழ்வைத் தடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பயிர்செய்கை முயற்சிகள் பாதிக்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் பேராறில் தொடர்கின்ற மணல் அகழ்வால் ஆற்றின் இரு பக்கமும் உள்ள மரங்கள் அழிக்கப்படுகின்றன. இது ஒரு காடழிப்பாகவே கருதப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தடுப்பதற்கு கற்சிலைமடுவில் உள்ள பொது அமைப்புக்களிடமோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடமோ சட்டரீதியாக மணல் அகழ்வை ஒப்படைப்பதன் மூலம் ஆற்றில் நடைபெறுகின்ற மணல் அகழ்வைக் கண்காணிக்க முடியும். இதனால் எதிர்காலத்தில் நிலத்தடி நீர்ப் பாதிப்புகள் ஏற்பட்டு விவசாய நிலங்களில் இருந்து மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைமை ஏற்படும். பேராறில் தொடர்கின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றது. (ற-13)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீண்டு ஒலிக்கும் நீதிக்கான குரல்

நீதி கேட்டு முறையிடுவோரின் குறையறிந்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதென்பது தமிழர்களின் இரத்தத்தோடு கலந்த ஒன்று. பசுவொன்றுக்கு நீதி வழங்க தன் மகனையே தேர்ச் சில்லால் நசித்துக் கொன்ற மனுநீதிச் சோழனும், கள்வன் என்று தவறாக முடிவெடுத்து கண்ணகியின் கணவனான கோவலனைக் கொன்ற குற்றவுணர்ச்சியால் அரசவையிலேயே உயிரை விட்ட நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னனும், தமிழர்களின் நீதி வழங்கலுக்கு மிகச் சிறந்த உதாரணங்கள். மனிதர்களுக்கு மட்டுமல்லாது பிராணிகளுக்குக் கூட நீதி செய்வதில் பேதம் பார்க்காத தமிழினம், இன்று தனக்கு நீதி கோரிப் போராடும் அவலத்தை காலம் உண்டாக்கியிருக்கிறது.

இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள், போர்க்குற்றங்கள் என்பவற்றுக்கு நீதி வழங்குமாறு கடந்த 12 வருடங்களாக தமிழினம் பல்வேறு வழிகளில் போராடி வருகின்றது. மனுநீதிச் சோழனோ, நெடுஞ்செழியப் பாண்டியனோ வழங்கிய அளவுக்கு இல்லாவிட்டாலும் கூட, அதில் நூற்றில் ஒரு பங்கு நீதியாவது ஐ.நா. விடம் இருந்து கிடைக்காதா என்று ஏக்கத்துடன் இருக்கின்றது தமிழினம். ஆனால் கடந்த 12 வருடங்களாக போர்க் குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பில் முதலில் துள்ளிக் குதிப்பதும், பின்னர் அடக்கி வாசிப்பதுவுமே ஐ.நா.வின் பாணியாக இருக்கின்றது.

அதற்கும் காரணமுண்டு. ஐ.நா. ஒன்றும் அப்பழுக்கற்ற புனிதர்களின் அமைப்பல்ல. உண்மையில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் நலனை முன்னிறுத்தியதாகவே ஐ.நா. வின் அரசியல் இயங்குகை பிரதானமாக நகர்கின்றது. சிலசமயங்களில் 'நடுநிலை' சாயத்தை பூசிக்கொண்டு, தன் மீதான கறைகளை மறைக்க அரிதாக, அதிசயமாக ஏதும் நல்ல காரியங்களையும் ஐ.நா. செய்வதுமுண்டு. அந்த நல்ல காரியங்களின் பின்னாலும் ஆதிக்க நாடுகளின் நலனை மனதிற் கொண்ட அரசியல் புதைந்திருந்தாலும் கூட, அவற்றின் உடனடிப்பலன் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் பொறியாக இருந்திருக்கிறது.

''அப்படியான ஒரு அதிசயம் ஐ.நா. மூலம் எங்களுக்கு நிகழ்ந்துவிடாதா? என்பதே இலங்கைத் தமிழ் மக்களினது ஒட்டுமொத்த பிரார்த்தனையாக கடந்த பன்னிரு வருடங்களாக நீள்கின்றது. ஆனால் ஒவ்வொரு முறையும் அந்தப் பிரார்த்தனைகளும், தமிழர்களின் ஏக்கங்களும் வஞ்சிக்கப்படுவதே விதியாகியிருந்தது. அப்படி ஒவ்வொரு முறையும் ஏமாந்தபோதும், சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தர்களாக மீண்டும் மீண்டும் நீதிக்கான குரலை உயர்த்துவதும் தொடர்கின்றது. இம்முறையும் நல்லூரின் வீதியில் பல்கலைக்கழக மாணவர்களும், லண்டனில் அம்பிகா என்ற பெண்ணொருவரும் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வழங்கக் கோரி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களின் அகிம்சைப் போராட்டம் ஐ.நா.வின் மனச்சாட்சியை உலுப்பி, கொஞ்சமேனும் இரக்கத்தைச் சுரக்கச்செய்து, நீதியின் துளியைப் பொழியச்செய்யலாமென நம்புகின்றனர். அப்படி ஒரு நீதி உடனடியாகக் கிடைக்காவிட்டாலும், அதற்கான முதலாவது முன்னெடுப்பாவது நிகழ்ந்தால் பேரானந்தமே. ஆனால் , நீதிக்காக எதையும் செய்ய ஐ.நா. ஒன்றும் மனுநீதிச் சோழனோ, நெடுஞ்செழியப் பாண்டியனோ கிடையாதே.




நன்றி - அவந்த ஆட்டிகல

# யாழ்ப்பாணம் போதனாவில் குருதிக்கு தட்டுப்பாடு!

## உயிர் காக்கும் பணிக்கு உதவ முன்வருமாறு மருத்துவ நிபுணர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மார்ச் 3**

**யாழ். போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் அனைத்துக் குருதி இனங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் குருதிக் கொடையாளர்கள் உயிர் காக்கும் பணிக்கு முன்வர வேண்டும் என வடபிராந்திய குருதி மாற்று பிரயோக மருத்துவ நிபுணர் மதுராங்கி கிருஸ்ண பிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.**



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை குருதி வங்கிப் பிரிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மருத்துவ நிபுணர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது குருதி வங்கியில் எல்லா வகையான குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. கொவிட் தொற்று காரணமாக நடமாடும் குருதிக்கொடை முகாம்களை நடத்த முடியாமல் போனதால் நாடளாவிய ரீதியில் குருதி சேகரிப்பில் மிகப்பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள், விபத்துக்களில் பாதிக்கப்படுவோர் மற்றும் புற்றுநோயாளர்களுக்கு வழங்குவதற்கு குருதி தேவைப்படுகிறது.18 வயதுக்கு மேற்பட்ட, 50 கிலோ உடல் நிறை உடையவர்கள் குருதி வங்கியில் குரு திக்கொடை வழங்க முடியும். தேசிய குருதி மாற்று பிரிவு (NBTS) என்னும் இணையத்தளம் ஊடாக முற்பதிவுகளை செய்து குருதியை வழங்க முடியும்.

குருதி வழங்குவதால் உடலுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்பில்லை. நான்கு மாதத்துக்கு ஒரு தடவை ஒருவர் குருதி வழங்க முடிவதோடு, கொரோனா தடுப்பூசி செலுத்தியவர்கள் 14 நாள்களுக்குப் பின்னர் குருதிக் கொடை வழங்க முடியும். அத்துடன், சுய தனிமைப்படுத்தலில் வீடுகளில் இருந்தவர்கள் 21 நாள்களுக்குப் பின்னரும், வெளி நாடுகளிலிருந்து வருகை தந்தோர் 3 மாத காலத்துக்குப் பின்னரும் குருதி வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-159)

# கொழும்புத் துறைமுகத்துக்கு இந்திய முதலீட்டாளர்கள்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு.மார்ச் 3

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை வர்த்தக மையமாக மாற்றுவதற்கு இந்திய முதலீட்டாளர்கள் வரவழைக்கப்படவுள்ளனர். அதற்கான பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த முனையத்தில் இந்தியாவின் அதானி நிறுவனம் ஜோன் கீல்ஸ் குழுமம் மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து அரச மற்றும் தனியார் வர்த்தகம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தங்களுக்கு இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து முதலீட்டாளர்களைப் பரிந்துரைக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இந்தியாவிடமிருந்து மாத்திரம் முதலீட்டாளருக்கான உடன்பாடு கிடைத்துள்ளது. அதனடிப்படையில் 35 வருடங்களில் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (க-இ)

# புதிய கூட்டுகள் இப்போது தமிழருக்குத் தேவையில்லை

## பிரிந்தவர்களையும் இணைத்து கூட்டமைப்பை பலப்படுத்துவோம் என்கிறது ரெலோ

வவுனியா, மார்ச் 3

**புதிய கூட்டுகள், புதிய பெயர்களோடு வருவது தமிழ்த் தேசியத்துக்கு அவசியமில்லை என்று தமிழீழ விடுதலை இயக்கம் கருத்துகின்றது என்று அதன் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழுக் கூட்டம் வவுனியா வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது;

தமிழ்க் கட்சிகளின் கூட்டுத் தொடர்பில் ஒரு உறுதியான முடிவை எடுத்துள்ளோம். 2001ஆம் ஆண்டில் ஆயுத ரீதியாக பலப்பட்ட ஒரு இனமாக இருந்தபோது உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பலமான ஒரு அமைப்பாக இயங்கி வந்திருக்கின்றது. அதிலிருந்து கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து சென்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தான் புதிய கூட்டை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார்கள்.

எனவே கூட்டமைப்பு இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில் அதற்குள்ளே அனைவரும் மீண்டும்வந்து இணையவேண்டும். புதியகூட்டுகள், புதிய பெயர்களோடு வருவது தமிழ்த் தேசியத்துக்கு அவசியமில்லை என்று எமது கட்சி கருதுகின்றது.

தமிழ்த் தேசியப் பேரவை என்பதற்கு அப்பால் தமிழ் மக்களுக்கான ஒரு ஐக்கியம் அவசியமாகின்றது.

அதனைக் கருதியே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அங்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் தான் இந்தக் கட்சிகள் பிரிந்து நின்று தனித்துச் செயற்பட்டனர். அதேகட்சிகளை வைத்துக் கொண்டு புதிய ஒரு கூட்டை ஆரம்பிப்பதை விட கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமான விடயங்களைச் சீர்செய்து கூட்டமைப்பானது மீளக் கட்டியமைக்கப்பட்டு, செழுமைப்படுத்தப்பட்டு அனைத்துக் கட்சிகளையும் உள்வாங்கிக் கொண்டு பயணிப்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதுவே எமது மக்களின் எதிர்காலத்துக்கும், அரசியலுக்கும் பலம் சேர்க்கும் என்று எமது கட்சி கருதுகின்றது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை கூட்டமைப்பில் உள்ள அனைத்து அங்கத்துவக் கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்மானித்த பின்னரே முடிவை அறிவிக்கும். அதுவே இறுதி முடிவாகவும் இருக்கும். ஒவ்வொரு கட்சிகளும் தங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம்- என்றார். (ப-110)



### தனிமைக் காலம் நிறைவு;

## யாழில் இருந்து 132 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணத்தில், பாதுகாப்பு படைகளின் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிநாடுகளிலிருந்து வந்த இலங்கையர்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து நேற்று தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பாதுகாப்பு படைகள் (யாழ்ப்பாணம்), 52வது தரைப் படைத்தலைமையகம் மற்றும் 512ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த டுபாய், குவைத், கட்டார் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த 132 பேரே இவ்வாறு வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்

பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் யாழ்ப்பாண மாவட்டப் பிரிகேடியர் நிலைப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஹிரான் ரப்ஃஹிமால் தனிமைப்படுத்தலில் இருந்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ப)

## விற்பனை நிலையத்தில் பொருள்கள் தீயில் நாசம்

வவுனியா, மார்ச் 3

பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

இந்த விபத்து வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் கிராம மக்கள் தீயை அணைப்பதற்கு கடுமையான முயற்சிகளை எடுத்தபோதும் வியாபார நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பொருள்களும் முற்றாக எரிந்து சாம்பலாகின.

மேலும், சுமார் 6 லட்சம் ரூபாக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்துள்ளன என வியாபார நிலைய உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

மின்சார ஒழுக்கு தீ விபத்துக்கு காரணமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய)

## நெஞ்சு வலியென மயங்கி சாவு

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, மார்ச்.3

நெஞ்சு வலிக்கிறது என்று கூறி மயங்கி வீழ்ந்த குடும்பத் தலைவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

கணபதிப்பிள்ளை ரவிகரன் (வயது -57) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கல்வயல், முதலாம் மைல் கல்லடியில் இடம் பெற்றது. அப்பகுதியில். உள்ள மில்லில் பணியாற்றும் இவர் வேலைக்குச் செல்ல ஆயத்தம் செய்த வேளையில் நெஞ்சு வலிக்கிறது என்று கூறி மயங்கி வீழ்ந்த நிலையில், அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையின் பிரகாரம் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ப-9)

## சடலத்தை 'சூட்கேசில்' கடத்திய நபர் மாயம்

### தகவல் கோரும் பொலிஸார்

கொழும்பு,மார்ச் 3

கறுப்பு நிற சூட்கேஸில் அடைக்கப்பட்ட சடலத்தை, பேருந்தில் எடுத்து வந்த நபர் மாயமாகியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்கள் அறிந்தவர்களைத் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் சூட்கேஸிலிருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. 119 என்ற அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக குறித்த சடலம் மீட்கப்பட்டது.

பொலிஸாரின் மேலதிக விசாரணையில் சடலம் 143 இலக்க வழித்தடப் பேருந்தில், எடுத்து வரப்பட்டுள்ளது. எனினும் அதனை எடுத்து வந்தவர் தலைமறைவாகியுள்ளார்.

ஹங்வெல்ல பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து சடலம் கொழும்புக்குக் கடத்தப்பட்டுள்ளது.

143 ஆம் வழித்தட இலக்கத்தைக் கொண்ட அந்தப் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்கள் கிடைத்தால் 071 859 15 57 / 011 243 33 33 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (சு-இ)

## அடிக்கல் நடுகை

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் பொன் தீவு கண்டல் கிராமத்தில் உள்ள சென் அண்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானம் புனரமைப்புக்கான அடிக்கல் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்டான்லி டி மெல்லால் நாட்டப்பட்டது.

தேசிய ரீதியாக நடைபெறும் கிராமங்கள் தோறும் கிராமிய விளையாட்டு மைதானங்களை அமைத்தல் எனும் செயற்றிட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ-213)



## இரு பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு,மார்ச் 3

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தல் பிரிவுகளாக அறிவிக்கப்பட்டிருந்த இரண்டு இடங்கள் நேற்றுடன் விடுவிக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தின் கல்ஹின்ன மற்றும் பள்ளியகொட கிராம சேவகர் பிரிவுகளில் நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தல் உத்தரவு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது. (சு-இ)

# மன்னாரில் அதிகரிக்கின்றது தொற்றாளர்கள் எண்ணிக்கை

## இதுவரை 271 பேருக்கு தொற்று

மன்னார், மார்ச் 3

**மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 271 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவித்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 2 மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களில் மேலும் 9 கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையத்தின் குடும்பத்தினருடன் தொடர்புபட்டவர்களாகவும், மேலும் ஒருவர் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றின் பணியாளராகவும், 5 ஆவது நபர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கடமையாற்றும் ஒருவராகவும் இனம்காணப்பட்டுள்ளார். இதனால் நாடாளுமன்ற உறுப்பினரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

நேற்று முன்தினமும் தொற்றாளர்களாக நான்கு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாந்தை மேற்கு பகுதியில் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற 2 மாணவர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் முதல் நிலை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் பாடசாலையில் தனிப்பட்ட ஒரு பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை சுகாதார பிரிவினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் - என்றார். (ப-56)

## 80 வயதில் உதவிகள் இன்றி தவிக்கும் 2 முதியவர்கள்



முல்லைத்தீவு, மார்ச் 3

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட விசுவமடு மேற்கு பகுதியில் வசிக்கும் இரண்டு முதியவர்கள் உதவிகள் எவையும் இன்றி தவித்து வருகின்றனர்.

முதியோர் உதவிப் பணம் மற்றும் சமுர்த்தி பணம் ஆகியவற்றை மட்டுமே நம்பி வாழும் மிகவும் வயது முதிர்ந்த குடும்பமான நாங்கள், எமது வாழ்வாதாரத்துக்கு சில வேளைகளில், முடியாத வயதிலும் கூலிவேலைக்குச் சென்று வருகின்றோம். தற்பொழுது எமது கண்கள் பார்வை இழந்து வருகின்றன. எனினும் வைத்தியசாலை சென்று சிகிச்சை பெறுவதற்கு எவ்வித உதவியும் இல்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட 76 வயதுடைய பெண் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாம் 25 வருடகாலமாக வாழ்ந்து வந்த வாழ்விடத்தை அரச காணி எனக்கூறி, நாம் வாழ்ந்து வந்த வீட்டையும் உடைத்து விட்டு புதிதாக வீடு ஒன்றை அமைத்துத் தருகிறோம் எனக் கூறினர். பின்னர் தகரக்கொட்டகை ஒன்றை அமைத்துத் தந்தனர். அதில் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் வாழ்ந்து வருகிறோம். இரவு வேளைகளில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத வீட்டில் தான் நாங்கள் இருவரும் வாழ்கிறோம் எனவும் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, இவர்கள் வசிப்பதற்கு வீடு ஒன்றை பெற்றுத்தர முன்வரவேண்டும் என்பதே பலரதும் கோரிக்கை ஆகும். (ந-113)



## தலைமைத்துவ பயிற்சி

கொடிகாமம், மார்ச் 3

கோப்பாய் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோசனின் ஒழுங்குபடுத்தலில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளராக 'ஒன்று கூடுவோம் இலங்கை' அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் சுந்தரலிங்கம் நக்கீரன் கலந்து கொண்டார். (ச-159)

## கொடிகாமம், கச்சாய் பகுதியில் 6 குடும்பங்கள் தனிமையில்

கொடிகாமம், மார்ச் 3


கொடிகாமம் தெற்கு, கச்சாய் வீதியில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில் அடையாளம் காணப்பட்ட கொரோனத் தொற்றுக்குள்ளானவருடன் தொடர்புடைய 6 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கச்சாய் வடக்கு பகுதியில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், கொடிகாமம் தெற்கில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-159)

## காட்டு யானைகள் அட்டகாசம்: பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாவோடைப் பகுதியில் யானைகள் அட்ட காசத்தால் தாம் அச்சத்தில் உள்ளனர் என்று அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



நாம் விவசாயத்தையே எமது தொழிலாகக் கொண்டுள்ளோம். தற்போது எமது கிராமப் பகுதிக்குள் நுழை யும் யானைகள் எமது பயிர் நிலங்களையும், தென்னை மரங்களையும் சேதப்படுத்தி வருகின்றன. அடர்ந்த காடுகள் இல்லாத நிலையில் இதுவரை காலமும் வராத யானைகள் எவ்வாறு திடீரென எமது பகுதிக்கு வந்துள்ளன என்பதில் சந்தேகமே நிலவுகிறது. இந்த விடயம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொண்டு, எமது வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத் தித்தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (ற-6)

**கணக்காளர் (பெண்) தேவை**

பிரசித்தி பெற்ற உற்பத்தி விநியோகம் நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் உள்ளகக் கணக்காளர் தேவை.

வயது 25 தொடக்கம் 35 வரை

தொடர்புகளுக்கு: 077 5833045
077 7808954

## பச்சிலைப்பள்ளி பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் இன்று

கிளிநொச்சி, மார்ச் 3

பச்சிலைப்பள்ளி பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் இன்றைய தினம் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் மிக நீண்ட நாள்களாக அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெறவில்லை. பிரதேசத்தில் கலந்துரையாடலை மேற்கொள்ளாமல் மாவட்ட ரீதியில் எதனையும் செய்ய முடியாது என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தை தொடர்ந்தும் குறித்த தினங்களில் நடத்த இணைத்தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (வ-6)

**7ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**பொன். அப்பையா**

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞரும் சமாதான நீதிவானும் JP)

திதி : அபரபக்க பஞ்சமி

ஆண்டுகள் ஏழு மின்னலென மறைந்தாலும்
எமை ஆளாக்கியவரின் பிரிவுத்துயர்
அணையாது அப்பா
நேர்மை சேர் வாழ்வில் நீங்கள் தனித்துவம்
கூர்மை சேர் துறைகளில் நீங்கள் மகத்துவம்
ஆண்டுகள் ஆயிரம் போயினும் மறவோமே
இந்த உலகம் உள்ளவரை உம்
நினைவில் வாழ்வோமே அப்பா !

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

மலர்வு 30.09.1937 உதிர்வு 19.02.2014

'அம்பிகை வாசம்'
புலோலி தெற்மேற்கு,
புலோலி

குடும்பத்தினர்

# 12 கிலோ கஞ்சா பொதிகள் மீட்பு



கிளிநொச்சி, மார்ச் 3

**கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 12 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது என மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.**

குறித்த பகுதியிலுள்ள வயல் வெளிகளை அடுத்து காணப்பட்ட சிறிய பற்றைக்குள், சந்தேகத்துக்கிடமான பொருள்கள் காணப்படுகின்றன எனக் கிடைத்த தகவலுக்கமைய, கிளிநொச்சி மாவட்டத்தின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் . அந்தப் பகுதியைச் சோதனையிட்டனர். சோதனையின்போது அப் பகுதியிலிருந்து 12 கிலோ 762 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பொருள்கள் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (ந-6.113)



# கடல் அரிப்பில் சிக்கியுள்ள அல்லிராணிக் கோட்டை

## நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மக்கள் கோரிக்கை

மன்னார்,மார்ச் 3

மன்னார் முசலி பிரதேசத்தில் அரிப்பு எனுமிடத்தில் அமைந்துள்ள தமிழர்களின் வரலாற்றைப் பறை சாற்றி நிற்கும் அல்லிராணிக் கோட்டை கடலரிப்பால் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் மரபுரிமை வரலாற்றுச் சின்னம் ஒன்று, மெல்லமெல்ல அழிவடைந்து கொண்டிருப்பதை எவரும் கண்டுகொள்ளாமல் இருக்கின்றார்கள்.

கடல் அரிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் அல்லிராணிக் கோட்டைப் பகுதியில் சில வருடங்களுக்கு முன்பு கடலரிப்பு ஏற்பட்ட பகுதியில் 100 மீற்றர் அளவில் பாறைகள் போடப்பட்டு கோட்டைப் பகுதி மட்டும் கடலரிப்பால் பாதிக்கப்படாமல் தடுப்பணை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது கற்பாறைகள் போட்ட இடத்தை விட்டு அதனைச் சுற்றியுள்ள பகுதியை கடல் அடித்துச் செல்கின்றது.

இதனை பலமுறை உரியவர்களிடம் தெரிவித்தும் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. கடல் அரிப்பு ஏற்படும் பகுதிகளில் விரைவாக கற்பாறைகளைக் கொண்டு தடுப்பணை அமைக்காவிட்டால் நிச்சயமாக இன்னும் சில வருடங்களில் தமிழர்களின் மரபுரிமை வரலாற்றுச் சின்னமான அல்லிராணிக் கோட்டை அழிந்துவிடும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் -என்றனர். (ஜ-213)

# குறைந்த செலவில் இறுதிக் கிரியைகள்

## கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, மார்ச் 3

ஒருவரின் இறப்புக்குப் பின்னர் அவருடைய குடும்பம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில், இறுதிக் கிரியைகளை செலவுகளைக் குறைத்து இலகுவாக நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி திருநெறிக் கழக செயலாளர் அ.சிவஞானம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் சமய சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, அன்பையும் ஆற்றுப்படுத்தலையும் மனநிம்மதியையும் ஏற்படுத்த வேண்டிய சடங்குகள் இன்று மேலும் சுமைகளை ஏற்படுத்துகின்றன எனக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

எனவே இறுதிக் கிரியைகளின் செலவுகளைக் குறைக்க புதிய குருமார்களை உருவாக்கிப் பயிற்சிகளை வழங்குதல், தமிழில் கிரியைகள் மேற்கொள்ளக் கூடிய குருமார்களுக்கான பயிற்சி வழங்கல், இறப்பு வீடுகளில் வீண் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்தல், பிரதேச மட்டத்தில் அந்தியாகால சேவை நிலையங்களை உருவாக்கல் மற்றும் இறுதி ஊர்வலங்களை அமைதியாகவும் சமய பாரம்பரிய முறைப்படியும் கொண்டு செல்லுதல் என்பவை தொடர்பில் ஆராயப்பட்டன. இது தொடர்பான விடயங்களை மேலும் கலந்துரையாடுவதற்கு குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. (வ-13)

# மாற்றுவழியூடாக இறுதி ஊர்வலங்கள்

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி நகர்ப் பகுதிக்குள் இடம் பெறும் இறப்புச் சம்பவங்களின் இறுதி ஊர்வலங்கள், இயன்றவரை கிளிநொச்சி நகருக்குள் வராமல் அதற்கான மாற்றுவழிகளைப் பயன்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி ஊர்வலங்கள் கிளிநொச்சி நகரத்தின் ஏ-9 சாலையூடாக நகர்வதன் காரணமாக, சாலையில் போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன. திருநகர் சுடலைக்கான இறுதி ஊர்வலங்கள் இயன்றவரை மாற்றுவழிகளைப் பயன்படுத்தி, கிளிநொச்சி நகருக்குள் இறுதி ஊர்வலங்கள் வராமல் செல்வதற்கான தீர்மானங்கள் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தல்கள் 15 நாள்களில் அறிவிக்கப்படவுள்ளன. இறுதி ஊர்வலங்களில் நான்கு இடங்களில் மட்டும் வெடிகள் கொளுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக, வீட்டிலும் சுடலையிலும் இடைவெளியில் இரு இடங்களிலும் என மொத்தமாக மக்களுக்கு இடையூறு இல்லாத நான்கு இடங்களில் மட்டும் வெடிகள் கொளுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். (ந-13)

# போரால் பாதிக்கப்பட்ட 149 பேருக்கு கொடுப்பனவு



முல்லைத்தீவு,மார்ச் 3

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 149 பேருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டார்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 30 பயனாளிகளும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 26 பயனாளிகளும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 49 பயனாளிகளும், துணுக்காய் பிரதேசத்தில் 15 பயனாளிகளும், மாந்தைகிழக்கு பிரதேசத்தில் 25 பயனாளிகளுமாக மாவட்டத்தில் 145 பயனாளிகளும், பொது இடங்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவின் கீழ் நான்கு பேருமாக 149 பேருக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் மற்றும் பயனாளிகளின் இருப்பிட தொலைதூரத்தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பயனாளிகளுக்கே முதற்கட்டமாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் இழப்பீட்டு அலுவலகத்தின் ஊடாக 10.2 மில்லியன் ரூபா கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-19)

# தலைதெறிக்க ஓடியதால் உயிர் தப்பிய நபர்

மன்னார், மார்ச் 3

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர், யானையின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

மன்னார், மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான், விளாத்திகுளம் உள்ளக வீதியால் நேற்றுமுன்தினம் பயணித்த ஒருவர் குறித்த வீதியின் குறுக்கே வந்த யானையிடம் மாட்டிக் கொண்டார்.

எனினும் அவர் தனது மோட்டார் சைக்கிளை வீதியில் போட்டுவிட்டு அங்கிருந்து தப்பித்தார். கோபம் கொண்ட யானை குறித்த நபரை விட்டுவிட்டு, அவர் பயணித்த மோட்டார் சைக்கிளைச் சேதமாக்கியுள்ளது. அயல் கிராமத்துக்கு ஓடிச் சென்ற அவர், மக்களின் உதவியை நாடினார். சம்பவ இடத்தக்கு வந்த மக்கள், மற்றும் இராணுவத்தினர் சேதமடைந்த மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர். (ப-56)

# ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்தியாவின் தலையீடு அவசியம்

## நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை

**சென்னை,மார்ச் 3**

**இலங்கை தொடர்பாக மேற்குலக நாடுகள் முன்னெடுக்கின்ற தீர்மானத்தில், ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க இந்தியா தலையிட வேண்டும். அது தொடர்பான தீர்மானங்களை சட்டசபைத் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும் என்று எதிர்பார்கின்றோம்.**

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார். சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு அவர் வழங்கிய நேர்காணல் தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வருகின்ற ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பிலான விடயத்தில் இந்தியா தலைமைத்துவம் எடுக்கவேண்டும். இலங்கையை பொறுப்புக்கூற வைத்தல், மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துதல் என்பவற்றுக்கும் இந்தியா அரசு துணைபுரிய வேண்டும். வருகின்ற சட்டசபைத் தேர்தல் களத்தில், இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்குப் பாரப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழகக் கட்சிகள் அனைத்தும், தமது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு இந்தியாவின் தலைமையில், சர்வதேசத்தின் மேற்பார்வையில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதையும் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும். இதேவேளை இந்தியா முன்வைக்கின்ற 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள இனவாதம் அனுமதிக்காது. இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்பதை அங்கீகரித்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை, தூக்கியெறிந்துள்ள சிங்கள இனவாதம், தமிழர்களின் பாரம்பரிய தேசத்தைச் சிதைக்கின்ற வகையில் மேற்கொண்டு வருகின்ற சிங்கள குடியேற்றங்களை யும், பண்பாட்டு அழிப்பையும் தடுத்து நிறுத்த வேண்டும் சிங்கள பேரினவாதம் தமிழினத்தின் அடையாளத்தை அழித்தும், தாயகத்தைச் சிதைத்தும் மேற்கொண்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் தார்மீகக்கடமை இந்தியாவுக்கு இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் தீவுகளில் சீனா நிலைகொள்ள முனைவது, ஈழத்தமிழர்களின் இறைமைக்கு முரணாக அமைவது மட்டுமன்றி, தமிழகத்தினதும் இந்தியாவினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது. என்றுள்ளது. (க-இ)

## பெண்ணின் சங்கிலி அறுப்பு

மட்டக்களப்பு,மார்ச் 3

உதவி செய்கிறேன் என பாசாங்கு காட்டி, பெண்ணின் சங்கிலியை அறுத்துச் சென்ற இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சைக்கிளில் சென்ற பெண் ஒருவரின் சைக்கிள் செயின் அறுந்ததையடுத்து அவருக்கு உதவி செய்கிறேன் எனத் தெரிவித்த இளைஞர், அந்தப் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். இதனையடுத்து குறித்த பெண் செய்த முறைப்பாட்டை அடுத்து மாமாங்க பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

## 5 லட்சம் பேருக்கு தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 3

இலங்கையில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி 29 ஆம் திகதி நாட்டில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைவாக இதுவரை 5 லட்சத்து 9 ஆயிரத்து 275 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நன்கொடையாக ஜனவரி 28 ஆம் திகதி 5 லட்சம் தடுப்பூசிகள் நாட்டுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவின் சீரம் நிறுவனத்தால், மேலும் 5 லட்சம் தடுப்பூசிகள் பெப்ரவரி 25 ஆம் திகதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## ஆணைக்குழு அறிக்கைக்கு சட்டத்தரணிகள் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 3

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாக, சட்டத்தரணிகள் நால்வர், தலைமை நீதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சேனக பெரேரா, நாமல் ராஜபக்ச, அச்சலா சேனாவிரத்ன மற்றும் ஜெயரத்னராஜா தம்பியா ஆகியோரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தலைமையில் மூன்று பேர் கொண்ட விசாரணை ஆணைக்குழு கடந்த வருடம் நியமிக்கப்பட்டது.

அதன் பின்னர் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கடந்த டிசெம்பர் மாதம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## இரு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு,மார்ச்.3

இரண்டு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயத் துறை அமைச்சு மற்றும் பற்றிக், கைத்தறி ஆடைகள் மற்றும் சுதேச ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இதன்படி விவசாயத் துறை அமைச்சின் புதிய செயலாளராக எம்.பி.ஆர் புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார். பற்றிக்,கைத்தறி ஆடைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி துறை அமைச்சின் புதிய செயலாளராக பீ.எல்.ஏ.ஜே தர்மகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் தமக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி ஜயசுந்தரவிடமிருந்து பெற்றுக்கொண்டனர். (ஐ-இ)

## மியான்மர் சிறையில் இலங்கை மீனவர்கள்

கொழும்பு,மார்ச் 3

இலங்கையைச் சேர்ந்த 12 மீனவர்கள் மியான்மர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம், இரண்டு கப்பல்களில் மியான்மர் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 12 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது மியான்மரில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் நேற்று முன்தினம் மீனவர்கள் மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்று மியான்மருக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் நளின் டி சில்வா உறுதிபடுத்தியுள்ளார். (க-இ)

# கோத்தாவின் கருத்து தூரநோக்குடையதாம்

## புகழாரம் சூட்டுகிறார் மங்கள

கொழும்பு, மார்ச் 3

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கருத்து தூர நோக்குடையது என்று முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர பாராட்டியுள்ளார்.

பாகுபாடு ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச டுவிற்றர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார். அந்தப் பதிவை மேற்கோள்காட்டி மங்கள சமரவீர தமது டுவிற்றர் பக்கத்தில் இட்ட பதிவிலேயே ஜனாதிபதியைப் பாராட்டியுள்ளார்.

அதில் "தூரநோக்குடைய உங்கள் மேன்மையான கருத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.



வாய்வழியாகக் கூறுகின்றவற்றை செயற்படுத்துவதென்பது இன்னமும் தாமதமாகிவிடவில்லை. அதேவேளை வயது, பாலினம், இனம் மற்றும் நம்பிக்கை ஆகிய பாகுபாடுகளின்றி கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாக்க விரும்பும் அனைவரையும் துரோகிகள் என்று முத்திரை குத்தாமல் இதனைச் செயற்படுத்த வேண்டும்" என்றுள்ளது. "இன்று பாகுபாடு ஒழிப்பு தினமாகும். நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் வயது, பாலினம், இனம், உடல்மொழி மற்றும் நம்பிக்கைகள் ஆகிய வேறுபாடுகள் எவையுமின்றி இந்த நாட்டில் வாழும் பிரஜைகள் அனைவரும் கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையை பாதுகாப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்" என்று ஜனாதிபதி தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். (ப)



உள்ளூராட்சி சபை

## பெண் பிரதிநிதிகளுக்கான கழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
உள்ளூராட்சி சபைகளின் பெண் பிரதிநிதிக ளுக்கான 'கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள்' நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு பற்றிய பெண்களுக்கான கழகத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு ரில்கோ விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மகளிர் அபிவிருத்தி நிலையம், ஜசாக் (JSAC) மற்றும் சேர்ச் போ கொமென் கிரௌண்ட் (Search For Commom ground) என்பன இணைந்து இதை முன்னெடுத்தன.
2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்டு, யாழ். மாவட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்த சுமார் 80 பெண் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது அவர்களின் எதிர்காலத் திட்டங்கள், ஊடகங்களுடனான உறவு நிலை, தேர்தலின் பின் அவர்கள் மேற்கொண்ட சாதனைகள், எதிர்கொண்ட சவால்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டன. இறுதியில் யாழ். பிராந்திய ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை வலுப்படுத்தும் முகமான கலந்துரையாடலும் இடம்பெற்றது. (வ)

# பல்கலை. நகர அபிவிருத்தி திட்டத்தை மீள ஆரம்பிக்குக

யாழ்.பல்கலை. பேரவை உறுப்பினர் கோரிக்கை



**கிளிநொச்சி, மார்ச் 3**
**2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்டு, ஆட்சி மாற்றம் காரணமாகக் கைவிடப்பட்ட கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று, நிதி மூலதனச் சந்தை அரசதொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கோ.ருஷாங்கன் கோரிக்கை விடுத்தார்.**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பேரவை உறுப்பினர்களுடன் உரையாடிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகமும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டே, பல்கலைக்கழகத்துக்கும், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் 2014ஆம் ஆண்டு அறிவியல் நகர் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கு 2ஆயிரத்து 300 மில்லியன் ரூபா நிதியுதவியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக, 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக இந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. இப்போது மீண்டும் ஜனாதிபதி கோத்தாபயவின் தலைமையில், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தற்போது நாட்டின் பிரதமராக செயற்பட்டு வரும் நிலையில், அறிவியல்நகர் பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்றார். (ஐ-13)

போதையில் சாரத்தியம்;

## கைதான சந்தேகநபர் வழக்கிலிருந்து விடுதலை

யாழ்ப்பாணம்,மார்ச் 3
மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைதான நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
கொக்குவில் பிரம்படி பகுதியில் வைத்து யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.
வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நிதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட படிவத்தில் மதுபானத்தின் செறிவு குறிப்பிடப்படாத காரணத்தால், வழக்கிலிருந்து சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சர்மினி பிரதீபன் மன்றுரைத்தார்.
இருதரப்பு சமர்ப்பணங்களின் பின் பொலிஸ் படிவம் 414 இல் மதுபானத்தின் செறிவு குறிப்பிடப்படாத காரணத்தால் சந்தேக நபரை வழக்கிலிருந்து விடுவித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (ஐ-319,320)

## முள்ளிவாய்க்காலிலிருந்து சாதித்த பல்கலை மாணவனுக்கு மதிப்பளிப்பு



முல்லைத்தீவு, மார்ச் 3
முல்லைத்தீவு மாவட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் பிறந்து வளர்ந்த பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி ஊடகத்துறையில் பட்டம் பெற்ற யேசுரட்ணம் சிறி என்ற மாணவனது வீட்டுக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் மற்றும் கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்டவர்கள் நேரில்சென்று மாணவனின் திறமைக்கு மதிப்பளித்துள்ளனர்.
முள்ளிவாய்க்கால் பகுதியில் பிறந்து, போரின் பாதிப்புக்குள்ளாகி, பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி ஊடகத்துறையில் கற்கை நெறியை முடித்து கடந்த 24 ஆம் திகதி பட்டம் பெற்ற மாணவன் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்ட மாணவன் என துரைராஜா விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட போதிலும் அதற்கான விருது பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இடை நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் இந்த மாணவன் பட்டம் பெற்று வீடு திரும்பிய போது கிராமத்தில் மக்கள் அமோக வரவேற்பை கொடுத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து கூட்டமைப் பின் நடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதேச சபை உறுப்பினர்களான க.ஜனமேஜயந், எஸ். கஜன் மற்றும் முன்னால் வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் உள்ளிட்டவர்கள் மாணவனின் வீட்டுக்குச்சென்று சாதனை படைத்த மாணவனுடன் கலந்துரையாடி அவரை மதிப்பளித்துள்ளனர். (ற-19)

## தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 3
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைய 'வறுமையற்ற இலங்கையை உருவாக்குதல்' எனும் தொனிப் பொருளில் ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பல நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான இருவார கால தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் மருதமுனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. (ச-இ)





எழுத்தாளரும் அரங்க செயற்பாட்டாளரும் சமூக சேவகருமான கலாலக்ஸ்மி தேவராஜாவின் நினைவாக கடந்த 26 ஆம் திகதி காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் குருதிக் கொடை நிகழ்வு இடம்பெற்றது. (ச)

## ஆறுமுகத்தான்குளம் மக்களுக்கு வயல் காணிகள் வழங்க வேண்டும்

*பிரதேச சபை உறுப்பினர் றனிஸ்லா வலியுறுத்து*

முல்லைத்தீவு, மார்ச் 3
முல்லைத்தீவு ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு வயல் காணி வழங்கப்பட வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா வேண்டுகோள் விடுத்துள்ளார். வயல் காணி வேண்டும் என 2018 ஆம் ஆண்டில் இருந்தே ஆறுமுகத்தான்குளம் கிராம மக்கள் போராடி வருகின்றனர். குறுந்தூர்குளம் மற்றும் நித்திகைகுளம் என்பவற்றின் கீழ் வயல் நிலம் காணப்படுகின்றது. வறுமையுடன் வாழ்கின்ற ஆறுமுகத்தான்குளம் மக்களுக்கு விரைந்து வயல் காணி வழங்கப்பட வேண்டும். வனவளத் திணைக்களத்திடமிருந்து குறித்த வயல் காணிகளைக் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மீட்டு ஆறுமுகத்தான்குளத்தில் வாழ்கின்ற 110 குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-13)

## இன்றைய நாள்

**மேடம்:** சொத்து சம்பந்தமான முயற்சிகளில் இருந்த தடை நீங்கும். பணியிடத்துக்கும் உங்களுக்குமான பந்தம் கூடும். கடன் குறையும். முன்பு மகிழ்ச்சி தந்த விடயங்கள் சிறு எரிச்சல் தரும்.

**இடபம்:** புதிய கருத்துக்களைச் சொல்லி பாராட்டுப் பெறுவீர்கள். வேண்டிய ஒருவர் மூலம் மகிழ்சியான செய்திகள் வரும். கொண்டாட்டம் அதிகரிப்பதால் சிரித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** வேறு வேலை மாறும் முயற்சியில் வெற்றி உண்டு. தந்தையின் புத்திசாலித்தத்தால் நன்மை விளையும். திடீர் அதிர்ஷ்டம் ஏற்படும். பண வரவு உண்டு.

**கடகம்:**நிகழ்வுகளில் வேகம் குறையும். மகிழ்ச்சியாக இருப்பீர்கள். சகோதர, சகோதரியுடன் சண்டைகளும் விவாதங்களும் வேண்டாம். எதிர்பாராத சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**சிம்மம்:**பெற்றோர் உடல்நலம் பற்றிய பயம் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். சந்திக்க நினைத்தவர் மூலம் நற்செய்தி வரும். பாராட்டுக் கிடைக்கும். உடற்பயிற்சியில் கவனம் கூடும்.

**கன்னி:**எதிர்பாராத நபருடன் சந்திப்பு நிகழும். ஓய்வு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் இருந்த பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். இளைஞர்களின் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:** மேலதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொண்டு மகிழ்வீர்கள். நீங்கள் திட்டமிட்ட விடயங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்வீர்கள். தெளிவு பிறக்கும். பணத்தை சீரான முறையில் கையாண்டு பலன் அடைவீர்கள். மனதில் உற்சாகம் பொங்கும்படியான செய்தி ஒன்று வரும்.

**தனுசு:** பொது இடங்களில் பணத்தைப் பற்றி கவனமாக இருப்பது நல்லது. அவமானப்படுத்தியவர்கள் உங்கள் உதவியை நாடி வருவார்கள். சிறு கசப்பு உருவாகலாம்.

**மகரம்:** தடைப்பட்ட விடயங்கள் உங்களின் முயற்சியால் கூடிவரும். உங்கள் அலுவலகத்தில் ஏற்படும் சலசலப்பைத் தீர்ப்பீர்கள். உயர் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** சகிப்புத் தன்மை அதிகரிப்பதால் மனக்கசப்புகள் மாறும். வாக்குக் கொடுத்தவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் தீரும். வெளிநாட்டுக் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

**மீனம்:** சம்பள உயர்வோடு கூடிய பதவி உயர்வு கிடைக்க தாமதமாகலாம். அவசரப்பேச்சினால் சங்கடத்தை சந்திக்க வேண்டி வரும். பண வரவும் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

# வனவிலங்குகளை பாதுகாப்போம்



### உலக வனவிலங்கு தினம் இன்று

■ மனோகரன் சசிகரன்
சமூக ஆர்வலர்

உலகின் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவற்றைப் பாதுகாப்பதற்காகவும், ஆண்டு தோறும் ஒவ்வொரு கருப்பொருளின் கீழ் வனவிலங்குகள் தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ் ஆண்டுக்கான (03 மார்ச் 2021) கருப்பொருளாக 'பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் நிலை நிறுத்துகிறது என்பது அமைகிறது வனவிலங்குகள் என்பது ஒரு பிராந்தியத்தின் அனைத்து வளர்ப்பு, பூர்வீக தாவரங்களையும் விலங்குகளையும் குறிக்கின்றது.

பூமியின் மேற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கிய காடுகள் உலகின் 80 வீதமான, விலங்குகள், தாவரங்கள் மற்றும் பூச்சிகளின் வீடாகும். எமது கடல் ஆறுகள் குளங்களில் உள்ள மீன்களில் இருந்து பூக்களில் விளையாடும் தேனீக்கள் வரை எமது வாழ்வியலில் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த உயிரினங்கள் அனைத்தும் பல்லுயிர் பெருக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு வழங்குகின்றன. வன விலங்குகள் இல்லாத நிலையில் பூமியின் சுற்றுச்சூழல் சமநிலை பாதிப்படையும் . சுற்றுச்சூழலை சமநிலைப்படுத்துவதில் வன விலங்குகள் முக்கிய பங்குவகிக்கின்றன.

உலகில் பல நாடுகளில் புகழ்பெற்ற பல வனவிலங்கு சுற்றுலாத்தளங்கள் உள்ளன. விலங்கினம் பற்றிய கல்வி அறிவுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் சில அபூர்வ இனங்களை அழிவில் இருந்து மீட்டு புத்துயிர் அளிக்க வனவிலங்கு பாதுகாப்பிடங்கள் உதவுகின்றன.

வன உயிர்களின் அழிவானது மனித வாழ்வின் ஆரோக்கியம் உட்பட வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். வனவிலங்குகளின் தீவிர வீழ்ச்சியானது பூமியின் இயற்கைச் சூழலை பாதிக்கின்றது.

வனவிலங்குகளின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக, வாழ்விட இழப்பு காணப்படுகின்றது. உயிரியல் பன்முகத் தன்மையின் இழப்பில் 80வீதம் வாழ்விட இழப்பாகும். வனவிலங்கு அழிவு விகிதத்தில் உலகின் உயிரினங்களில் கிட்டதட்ட 20வீதமானவை அடுத்த 30ஆண்டுகளில் அழிந்து போகும்.

இதில் அழிவை நோக்கி உள்ள உயிரினங்களில் கடந்த 2ஆயிரம் ஆண்டுகளில் 106 விலங்கு இனங்களும் 140 பறவை இனங்களும் அழிந்துள்ளன. தற்போதைய கணக்கெடுப்பின்படி மேலும் 300 இனங்கள் அழிவின் வாயிலின் உள்ளன. யானை, சிங்கம், புலி, சிறுத்தை, காண்டமிருகம், கரடி, காட்டெருமை, புள்ளிமான், கஸ்தூரிமான், முதலை, பாம்பு, மயில், சிங்கவால் குரங்கு, பறக்கும் அணில் போன்றவற்றில் சில சிற்றினங்கள் அடியோடு அழிந்து போகும் நிலையில் உள்ளன.

மனிதன் தனது எல்லையற்ற தேவைகளுக்காக விலங்குகளை வேட்டையாடுவதன் மூலம் பல அபூர்வ விலங்குகளின் சுவடுகள் தெரியாதவாறு அழித்துவிடுகின்றான். தற்பெருமைக்காகவும், பெருமளவு பணத்துக்காகவும் விலங்கு பொருள்களான தந்தம், தோள், இறைச்சி, பற்கள், கொம்பு, மயிர், எலும்பு மற்றும் அலங்கார, மருத்துவ தேவைக்காகவும் வேட்டையாடி கொன்று குவித்தான்.

மனிதர்கள் இயற்கையுடன் இசைந்து வாழும் வாழ்வினை மாற்றியமைத்து அதன் மூலம் உருவாக்கிய ஆபத்துக்களில் இருந்து விடுதலைபெற வழி தெரியாமல் அவலப்படும் வேளையில் வன விலங்குகளின் வாழ்வியல் முறையை மாற்றியமைத்து வனவிலங்குகளை மனிதர்களிடம் உணவுக்காக பிச்சை (பொறுக்கிதின்னி) எடுக்கும் நிலைக்கு கொண்டு வந்த பெருமை மனித குலத்தையே சேரும். வனவிலங்குகளுக்கு மனிதர்கள் உணவு அளித்தால் காடுகள் அழியும். காடுகள் அழிந்தால் மனித குலம் அழியும். வனவிலங்குகள் தம் உணவை தாமே தேடிக்கொள்வதினால்தான் காட்டின் வளர்ச்சியை பெருக்கமுடியும். இதனால்தான் கடவுளின் முதல் கோயிலாக காடுகள் கருதப்படுகின்றது.

கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியிலும் உலகெங்கிலும் உள்ள பல்லுயிர் வனவிலங்குகளின் இழப்பை தடுத்து நிறுத்தி எமது எதிர்கால சந்ததியின் பாதுகாப்புக்காக ஒன்று சேர்ந்து உலக ரீதியில் நடவடிக்கை எடுப்பது முன்னரை விட இக்கால கட்டத்தில் மனிதனுக்கு முக்கியமாகக் காணப்படுகின்றது. பொதுவாக அனைத்து நாடுகளிலும் காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு, பனிபுயல், நில அதிர்வு, விவசாயச் செய்கை, நில ஆக்கிரமிப்பு, மணல் அகழ்வு, சட்டவிரோத மின்வேலி, நஞ்சூட்டல், கழிவுப் பொருட்களை உட்கொள்ளல், பல வழி முறைகளில் வேட்டையாடுதல், வீதி விபத்து மற்றும் புகையிரத விபத்து போன்ற பல்வேறு காரணங்களினால் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.



வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு பல உலக நாடுகள், பல பொது அமைப்புக்கள் இறுக்கமான சட்ட திட்டங்கள் இருந்தும் வனங்களும் வனவிலங்குகளும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குத் தீர்வு காணமுடியாமல் பல நாடுகள் திணறுகின்றன.

ஆனால், எம் இன விடுதலையில் அதியுச்சம் தொட்ட 30ஆண்டுகள் இயற்கையுடன் இணைந்த வாழ்வைக் கொண்டிருந்தது. இக் காலகட்டத்தில் தான் வனத்துக்கும், வனவிலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் அதியுச்ச பாதுகாப்பு கிட்டியது என்பது ஆதார பூர்வமான உண்மை. தமிழீழ விடுதலைப் புலிகள் மரநடுகை, இயற்கை விவசாயம் என்பவற்றை ஊக்கப்படுத்தி காலபோக்கில் வனவள பிரிவென்ற தனியான பிரிவொன்றை உருவாக்கி வனவள, வனவிலங்கு பாதுகாப்பு மேம்பாடு என்ற அடிப்படையில் மக்கள் மத்தியில் உரிய விழிப்புணர்வு, மேம்பாட்டுச் செயற்திட்டங்கள், கடுமையான சட்டங்கள் மூலம் வனவளங்கள் உச்சகட்டப் பாதுகாப்பில் பாதுகாக்கப்பட்டன.

இவ் வளங்கள் 2009இன் பின் பல வழிகளிலும் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது ஓர் இன அழிப்பின் இன்னோர் பரிமாணமாகவே பார்க்கப்படல் வேண்டும். 'இயற்கை எமது நண்பன்' எனும் வாசகம் எம் மனதில் இருந்து அழிந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், எம் இளைய தலைமுறையினர் இவ் வளங்கள் அனைத்தையும் பாதுகாப்பதில் முன்னின்று உழைக்க வேண்[illegible]யது இன்றைய கால[illegible]டத்தின் கட்டாயமாகும். ■

# 350 உற்பத்தி பொருள்களுக்கு இந்த வருட இறுதிக்குள் தடை

கொழும்பு,மார்ச் 3

**இந்த வருட இறுதிக்குள் 350 உற்பத்திப் பொருள்கள் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கு சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

அந்த வகையில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் வகைகள் சிலவற்றின் பாவனையை எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் தடை செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை இலங்கையில் உற்பத்தி செய்ய மற்றும் விநியோகிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக சூழலுக்கு உகந்த பொருள்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக சுற்றாடல் அமைச்சு, பல்வேறு பிரிவினர்களுடன் கலந்துரையாடியுள்ளது.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்கள் அதிகமானவை சூழலுடன் சேர்வதால், நாட்டில் அதிகமாக சூழல் மாசடைவு ஏற்படுவதுடன், நீர் மாசடைகிறது எனவும் தெரியவந்துள்ளது. அதனையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# இன முரண்பாடுகளை அரசே தோற்றுவித்தது

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 3



கொவிட்-19 தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய முடியும் என அரசு எந்த நிலைப்பாட்டிலிருந்து அறிவித்துள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். சர்வதேச நாடுகளின் கட்டளைக்கு அடிபணிந்து அரசு செயற்படுகிறது. உடல்களை புதைப்பதா? அல்லது தகனம் செய்வதா என்ற விடயத்தில் இனங்களுக்கிடையில் தேவையற்ற முரண்பாட்டை அரசே தோற்றுவித்தது. இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்19 தாக்கத்தை அரசு முழுமையான தனது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டது. ஒரு நாடு ஒரு சட்டம் என்பதை உறுதியாகப் பின்பற்றுவதாகக் குறிப்பிட்ட அரசு, சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தற்போது கொவிட்-19 தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

தேசப்பற்று, ஒரு நாடு ஒரு சட்டம் ஆகியவை அரசுக்கு வெறும் தேர்தல் காலப் பரப்புரை என்பதை பெரும்பான்மை மக்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும். பொதுத் தேர்தலில் அரசு பௌத்த சிங்கள மக்களைக் கவர்வதற்காக ஒரு நாடு ஒரு சட்டம் என்ற விடயத்தை பரப்புரையாக்கி அதில் பயன்பெற்றுக் கொண்டது. கொவிட்19 தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய முடியும் என துறைசார் மருத்துவ நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்தும் அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

உடல்கள் தகனம் செய்யப்படும் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது என்பது உறுதி என்று பலமுறை ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கொண்டார்கள். இதனை கொண்டு சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் தேவையில்லாத பிரச்சினைகளை அரசே தோற்றுவித்தது- என்றார். (ப)

# நிறுவனங்களில் மோசடி: அறிக்கை நாடாளுமன்றுக்கு

கொழும்பு,மார்ச் 3



நல்லாட்சி அரசின் காலத்தில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றன எனக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. இந்தத் தகவலை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றன எனக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது, குறித்த அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை விவாதத்துக்கும் உட்படுத்தப்படும்.

அதேவேளை அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்து, விவாதத்துக்கு உட்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க-இ)

# மருத்துவர்களுக்கு ஓய்வு 63 வயதில்?

கொழும்பு,மார்ச் 3

விசேட மருத்துவர்களுக்கு மேலதிகமாக அனைத்து மருத்துவர்களும் சேவையில் இருந்து ஓய்வுபெறும் வயதை 62 தொடக்கம் 63 வரை நீடிப்பது தொடர்பான யோசனை, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதற்கமைய எதிர்காலத்தில் அதற்கான திருத்தங்களை முன்னெடுக்க பேச்சு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சுகாதார சேவை மற்றும் மருத்துவர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. அதேவேளை இலங்கை மருத்துவச் சபை சுயாதீனமான முறையில் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சிக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார். அத்துடன் புதிய அரசமைப்பு தொடர்பிலான வரைபில் சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக உள்ளடக்குமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

பாடசாலை மாணவர்களதும், மருத்துவர்களதும் சிற்றுண்டிசாலைகளை சுகாதாரப்படுத்தல் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் துரிதமாகப் பரவும் தொற்றா நோய் வைரஸ்களை அழிப்பது தொடர்பிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் கல்வி அமைச்சுக்கு வழங்கிய யோசனை பிரதமருக்கு எடுத்துரைக்கப்பட்டது. (க-இ)

# விளையாட்டு மைதானங்கள் சீரமைப்பு

சாவகச்சேரி,மார்ச் 3

விளையாட்டுக் கழகங்களின் மைதானங்களைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் இருந்தும் ஒரு மைதானம் வீதம் சீரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடை பெற்றன. தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் வாணி நவ விளையாட்டுக்கழகத்தின் கரப் பந்து விளையாட்டு மைதானம் நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறறது. (ஐ-9)

# சடல அடக்க அனுமதிக்கான வழிகாட்டலை வெளியிடுக!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 3

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டமைக்கு வரவேற்புத் தெரிவித்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, அதன்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்களை விரைந்து வெளியிடுமாறும் வலியுறுத்தியிருக்கிறது.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்ததாவது,

சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு காலம் தாழ்த்தப்பட்டிருந்தாலும், தற்போது அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

முஸ்லிம் சமூகத்தினரின் மதரீதியான நம்பிக்கையையும், உரிமையையும் மறுக்கும் வகையில் கட்டாயத் தகனத்தை நடைமுறைப்படுத்துவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். முஸ்லிம் சமூகத்தினரின் மதரீதியான உரிமையைப் புறக்கணிப்பதும், விஞ்ஞான ரீதியில் எவ்விதத்திலும் நிரூபிக்கப்படாததுமான ஒரு தீர்மானம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளமை உண்மையில் வரவேற்கத்தக்கதாகும்.

கட்டாயத்தகனம் தொடர்பான தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தற்போதைய தீர்மானம் ஆறுதலை அளித்திருக்கும்-என்றது. (ற-இ)

# வெவ்வேறு சம்பவங்களில் ஐவர் காயம்!

சாவகச்சேரி, மார்ச் 3

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மூவரும், வீதி விபத்தில் காயமடைந்த இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். பளை புலோப்பளையைச் சேர்ந்த தாயும் அவரது மகனும் மற்றும் நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த ஒருவருமே தாக்குதலில் காயமடைந்துள்ளனர். இதேவேளை, மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். கொடிகாமத்தைச் சேர்ந்த நபர் மற்றும் மீசாலை கிழக்கைச் சேர்ந்த இளைஞன் ஆகியோரே இவ்வாறு காயமடைந்துள்ளனர். (ற-9)

# ஜெனிவாவில் இந்தியா நீதியின் பக்கம் நிற்கும்!

## இலங்கை நம்பிக்கை



**கொழும்பு,மார்ச் 3**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொட ரில் இந்தியா அநீதிக்குத் துணைபோகாது என்று உறுதி யாக நம்புகின்றோம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இந்தியாவின் வகிபா கம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளரால் இலங்கை தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள விடயங்கள் அநீதி யானவை என்று ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். அந்த நிலைப் பாட்டில் இருந்து மாறப்போவதில்லை. எனவே, அநீதியைச் சரிசெய்து நீதி யின் பக்கம் நிற்குமாறு அனைத்து நாடுகளிடமும் நாம் கேட்டுள்ளோம். அந்த வகையில் இந்தியா அநீதியின் பக்கம் நிற்காது என்று நாம் உறுதி யாக நம்புகின்றோம். சத்தியம் நிச்சயம் ஒரு நாள் வெல்லும் என்பதும் உறுதி. கடந்த ஆட்சி, இணை அனுசரணை வழங்கி நாட்டைக் காட்டிக் கொடுத்தது. அதன் விளைவுகளே இன்று சவாலாக மாறியுள்ளன. உண்மை என்னவென் பதை நாம் எடுத்துரைத்து வருகின் றோம். பல நாடுகள் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டுள்ளன. சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் தமது ஆத ரவை உறுதிப்படுத்தியுள்ளன. இந்தி யாவும் நீதியின் பக்கம் நிற்கும்" - என் றார். (க-44)

# சாரதிகள் 6 பேருக்கு 2 ,25,000 தண்டம்

சாவகச்சேரி,மார்ச் 3

சாரதிகள் ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதி மன்றால் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படடது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய் யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா வும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# விசேட பூசையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

உலகில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறைஆசி வேண்டி நாளை வியாழக் கிழமை காலை 6.30 மணிக்கு மாதகல் பாணவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபா டுகள் நடைபெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ செ. சுந்தரேஸ்வரசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெற வுள்ளன. (ய)

## "பொ-பொ" பேரணி

# சிறிதரன் எம்.பியிடமும் பொலிஸார் வாக்குமூலம்

கிளிநொச்சி,மார்ச் 3

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக் கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டது.

இந்த வாக்குமூலத்தை கிளிநொச்சியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸார் பெற்றுக்கொண்டனர். (ஐ-6)



காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த 27ஆம் திகதி சிறுவர்களின் நடன நிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பவை இடம்பெற்றன. (ச)

# அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிர தேச செயலாளர் பிரிவிலுள்ள மலையாள புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகத்துக் கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இரா ஜாங்க அமைச்சின் நாடு பூராகவுமுள்ள 332 பிரதேச செயலங்களில் கிராமிய விளையாட்டு மைதானங்களை அமைக் கும் தேசிய திட்டத்தின் கீழ் இதற்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கிராமசேவகர், இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர் கள், மாவட்ட விளையாட்டு உத்தியோகத் தர்கள் மற்றும் இந்த விளையாட்டுக் கழக இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண் டனர். (ற-இ)

# அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றியவருக்கு ரூ. 2500 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

குறிப்பிட்ட அளவைவிட அதிக பயணிகளை ஏற்றிய குற்றத்துக்காக பயணிகள் பேருந்துச் சாரதிக்கு 2 ஆயி ரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. யாழ் நீதி வான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண் டதன் அடிப்படையில் தண்டம் விதிக்கப்பட்டது. (வ-319)

# சிவசக்தி ஆனந்தனிடம் 3வது முறையாக விசாரணை

வவுனியா,மார்ச் 3

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந் தனிடம் மூன்றாவது தடவையாகவும் மூன்று பொலிஸ் பிரிவு களின் பொலிஸார் நேற்று விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் வவுனியா ஆகிய பொலிஸ் பிரிவுகளின் பொலிஸாரே இவ்வாறு விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

சிவசக்தி ஆனந்தனின் வவுனியாவில் உள்ள அலுவ லகத்துக்கு நேற்றுக் காலையில் சென்ற வவுனியா பொலிஸார் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையி லான போராட்டத்தில் பங்கெடுத்தமை தொடர்பில் கேள் விகளைத் தொடுத்ததோடு, நீதிமன்ற உத்தரவுகளை மீறியதாகவும் சுட்டிக்காட்டினர். இதன்போது, தனது பெயர் குறிப்பிட்டு எவ்விதமான நீதிமன்ற உத்தரவுக ளும் வழங்கப்படவில்லை என்றும், தாம் நீதிமன்றத்தின் கட்டளைகளை மீறி நடக்கவில்லை என்றும், மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைக் கோரி நிற்கையில் அரசியல் கட்சியின் பிரதிநிதியாக மக்களுடன் மக்களாக போராட்டத்தில் பங்கேற்றேன் எனவும் சிவசக்தி ஆனந் தன் பதிலளித்துள்ளார். (ப-110)



# போதையில் சாரத்தியம் அறுவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச்.3

மதுபோதையில் சாரத்தியம் செய்த குற்றத் துக்காக அறுவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர் போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. இதேவேளை மற்றொரு வழக்கில் மதுபோதையில் வாக னம் [illegible] ரூபா 25ஆயிரம் [illegible] விடுவிக்கப்பட் டார். (வ-319)


ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 06 . 08 . 1954



இறைவன் அடியில் 13 . 02 . 2020

அமரர் திருமதி

செல்வநாயகம் தையல்நாயகி (தையல் அக்கா)

திதி : அபரபக்க பஞ்சமி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று 03.03.2021 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

109, சிவன் [illegible] வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். குடும்பத்தினர் 077 986 3089

# பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டன



யாழ்ப்பாணம், மார்ச் 3

'கனிதரும் மரங்களால் தீவகத்தை வளமாக்குவோம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் பயன்தரு மரங்கள் வழங்கும் செயற்பாடுகள் தீவகத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனது நிதியுதவியில் அல்லைப்பிட்டியில் 150 வாழை மரங்களும், கனடாவில் வாழ்ந்து வரும் புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவராசா மற்றும் கேசவராணி தம்பதிகளின் நிதி உதவியில் புங்குடுதீவின் ஊரதீவு, கேரதீவு மற்றும் இறுப்பிட்டி பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு 300 வாழை மரங்களும் வழங்கப்பட்டன. (வ-இ)

## மரண அறிவித்தல்



### செல்வி
### கருணாவதி இராசையா

யாழ்ப்பாணம் 10ஆம் இலக்கம் 3ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கருணாவதி இராசையா நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா நல்லம்மா தம்பதியரின் மகளும், சுமித்திரா, ரஞ்சினி, சாரதாதேவி, உதயகுமார், சிவ குமார், பாலசுந்தரி அகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன், ராகுலராஜன், கனகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற நவரட்ணம், மகாலிங்கம் அகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் புனித வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 357 5274

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 • 02 • 1950



மறைவு
01 • 03 • 2021

### சண்முகம் கிட்லர்

(முன்னாள் உத்தியோகத்தர் சீமெந்துக்கூட்டுத்தாபனம் -காங்கேசன்துறை)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடாவை (Ajax Ontario) வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கிட்லர் நேற்று முன்தினம் (01.03.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கனகசுந்தரம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அடோல்வ் (கனடா), அனோத்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், டீலியா (கனடா), தமேஸ்குமார் (கனடா) ஆகியோரின், அன்பு மாமனாரும், அபிகா, அன்சிகா, ஆர்வின், ஆரன், ஆயுஷி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கிச்னர் (கனடா), டென்சிங் (ஜேர்மனி), காலஞ்சென்ற கரன்சிங் மற்றும் தயாளன், கலா, குணாளன் (கனடா), லிங்கன் (கனடா), ஜோன்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2021 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் (Ajax, Ontario-canada) கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கிச்னர் (சகோதரன்):
001 4164313263 (கனடா)
அனோத்தா (மகள்):
001 2896244452 (கனடா)

தகவல்:
குடும்பத்தினர்.
இல 57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை கெங்காதரன்

(காரை S.கெங்கா)

**(முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பிரதேச செயலகம், சங்கானை, பிரபல முன்னாள் ஆசிரியர் இந்து நாகரிகம், விக்னா உயர் கல்லூரி, பட்டிமண்டப பேச்சாளர்)**

வேதரடைப்பு காரைநகரைப் பிறப்பிடமாகவும், விசவர்த்தனை வீதி, பண்ணாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கெங்காதரன் (02.03.2021) நேற்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய மாவட்ட விவசாய போதனாசிரியர்) மீனாட்சி (அமரர், இளைப்பாறிய ஆசிரியர் யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலர் (இளைப்பாறிய கணக்காளர், பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கம்- சங்கானை) அன்புக் கணவரும், ஜனகன் (ஆசிரியர், யாழ்ற்றன் கல்லூரி), கமலறாஜ் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்), கௌரீசன் (கொழும்பு) K.M. சுந்தர் (மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இலக்குமிகந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை), திருமகள் (கிராம சேவையாளர், பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வினித்தா (ஆசிரியை, யாழ் இந்துக் கல்லூரி), தர்ஷனா (ஆசிரியை, பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), அம்பிகா (உள்ளக பயிற்சி ஆசிரியை, காரை இந்துக் கல்லூரி) செந்தூரன் (நிகழ்ச்சி தொகுப்பாளர், சூரியன் FM, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவண்யன், யசோதரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கீர்த்திநாத் இன் பாசமிகு பேரனும், தங்கமணியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விசவர்த்தனை வீதி, பண்ணாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (04.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 502 7444, 077 124 8120

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை தியாகராஜா

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராஜா நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம் (ஜேர்மன்) தனலக்சுமி (கனடா) தனபாலசிங்கம் (டென்மார்க்), கேசவலக்சுமி, பாக்கியலட்சுமி (ஜேர்மனி) சாந்தலட்சுமி (ஜேர்மனி) வசந்தலட்சுமி (பிரான்ஸ்) தர்மராசசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் கலாதேவி (ஜேர்மன்), பாலகிருஷ்ணன் (கனடா) இராசாம்பாள் (டென்மார்க்) கௌரிராசா காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் காலஞ்சென்ற கௌரிபாலா மற்றும் சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்), ஹேமலதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லபிதன், லகிஷ், சுமதி-விக்னேஸ்வரன், சுதன்- பிரபா, சுஜந்தன்- பாமினி, சுகி-பிரபாகரன், ஆரணி, அபிலாஷ், அனோஜன், அனுஷா, சகியா, ஆஷா-மகிந்தன், அபிரா, நீரா, அபர்ணா- பிரணவன், சண்யா, சபேஷா, லக்ஷா, லதன், லவின் ஆகியோரின் பேரனும், கஜானா-ரொம், கஜானன், தீபிகா-தர்ஷன், அக்ஷா, தஸ்மிகா, ஷாயரோன், ஷஸ்மித், ஷாய்மீரா, றஞ்சித், ரியானா, அமிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.00 மணியளவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்மகள் ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:குடும்பத்தினர்.
077 99 00009
077 822 1957

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை சண்முகராஜா (ஷண்)

**(மூத்த ஊடகவியலாளர்)**

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாரஹேன்பிட்டி அண்டர்சன் தொடர்மாடிக் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்துரை சண்முகராஜா அவர்கள் நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னத்துரை, தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ம.ராஜரட்ணம், விசாலாட்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ச.பாக்கியவதி அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சி.பத்மாவதி மற்றும் சி.தர்மராஜா காலஞ்சென்ற சி.ஜீவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் த.மோகனாம்பாள் காலஞ்சென்ற ஜீ.அக்னஸ், காலஞ் சென்ற யோ.மனோன்மணி, காலஞ்சென்ற க.இராஜேஸ்வரி காலஞ்சென்ற ரா.ரட்ணதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் Dr.சாந்தினி (U.K), சுதர்சன் (பொறியியலாளர் U.S.A.), கனகேஸ்வரன் (பொறியியலாளர் U.K.) ஆகியோரின் சிறிய தந்தையும் த.செந்தில்குமரன் (ஆசிரியர்), த.நந்தகுமரன் (பொறியியலாளர் S.L.T.) த.உமையாள் (காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்), மாரிசுகத், ரஜனி அமில, பிரதீப் (ரஞ்சன்), காஞ்சனா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2021) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் இல.125, அரசடி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: S.ஸ்ரீநிமல்**
**071 4150 995**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 • 05 • 1938



மறைவு 02 • 03 • 2021

### திருமதி பொன்னையா அழகம்மா

கோப்பாய் அப்பிளானையைப் பிறப்பிடமாகவும், 206/4, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா அழகம்மா நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின், அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், றேனுகா (பிரான்ஸ்), விஜித்தா (அமெரிக்கா), வாகீசன் ( ஆசிரியர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நேமிநாதன் (பிரான்ஸ்), பிரதீபன் (அமெரிக்கா), பிரியதர்சினி (ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுயம்பவன், மானதி, பிரவர்ணா, பிரவிஷ்னா, பிரகலாதன், துகிலன், மேகவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தம்பிராசா, ஞானரத்தினம், செல்லத்துரை, குணரத்தினம், ராசதுரை, செல்லம்மா (கோப்பாய்), தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியாரும், செல்லத்துரை (உசன்), இராமலிங்கம் (யாழ்ப்பாணம்), சின்னத்துரை (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2021) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் இல, 206/4, பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**
**பொ.வாகீசன் (மகன்)**
**021 221 9911**
**077 378 7294**

**206/4, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பரணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 • 12 • 1957



மறைவு 28 • 02 • 2021

### திரு.வீரசிங்கம் நவபாலன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு.வீரசிங்கம் நவபாலன் அவர்கள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா செயரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செயராஜசாந்தினியின் (சாந்தா) ஆருயிர்க் கணவரும், சிந்துஜன், நிறோஜன், சாருஜன், அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யோகநாதன், ரதிதேவி, ரதிகுமாரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கமலாதேவி, தவராசா, சண்முகநாதன், சற்குணேஸ்வரி, கருணாகரன் (சுவிஸ்), தயாபரன் (ஜேர்மனி), பிரபாகரன் (கனடா), சுகந்தினி (ஆசிரியர், யாழ் சன்மார்க்க வித்தியாலயம்), காலஞ்சென்ற சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகந்தினி (சுவிஸ்), அருட்செல்வி (ஜேர்மனி), ஜனனி (கனடா), பிரதீபன் (இயக்குனர், உயர் தொழிநுட்பவியல் நிறுவகம்- திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு சகலரும், பிரதீபன், ஜெனித்தா, நேருஜா, ஜீவிகா, ஜெசிக்கா, ஜெனித்தா, ஜனகன், பிரியங்கன், நர்மதன், திபிஷா, கரிஷ்ராம் ஆகியோரின் மாமாவும், அனித்தாவின் சித்தப்பாவும், நேமியா, டக்சன், டிக்சன், லக்சிகா, பிறேம்சங்கர் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

தகனக்கிரியை வியாழக்கிழமை (04.03.2021) பி.ப 5.00 மணிக்கு கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**நிரோஜன் (மகன்): +1 6472156640 (கனடா)**
**பிரபாகரன் (மைத்துனன்): +1 4162091210 (கனடா)**
**ஸ்ரீ (சகோதரன்): +1 4166256677 (கனடா)**
**நேருகா (மருமகள்): +1 4168445485**
**ஜெனித்தா (மருமகள்): 0764847563**
**சுகந்தினி (மைத்துனி): 021 2053407 (இலங்கை)**

**தகவல்: ஜெ.பிரதீபன்**
**கலட்டி ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் • 26 • 10 • 1940



மறைவு • 02 • 03 • 2021

### கணபதிப்பிள்ளை சிவசிரோன்மணி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவசிரோன்மணி நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னம்மா தம்பதியரின் மூத்தமகளும், சிவசக்தி, தங்கராசா (வலிவடக்கு பிரதேசசபை உறுப்பினர்), தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2021) புதன் கிழமை தற்காலிக வதிவிடமாகிய குப்பிளானில் உள்ள இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கியைக்காக குப்பிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரன்**
**பொன்னுத்துரை தங்கராசா**

**குரும்பசிட்டி**

# துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 27 • 09 • 1934



இறப்பு 01 • 03 • 2021

## பி.தங்கமுத்து

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவரும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி **த.சத்தியமூர்த்தி** அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரிலும் பங்கெடுத்துக்கொள்கின்றோம். அத்தோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**

**ஆளுகைசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்**

**கல்வி வளர்ச்சி அறக்கட்டளை - கிளிநொச்சி.**

# மரண அறிவித்தல்





**தோற்றம் : 15.11.1930** **மறைவு : 28.02.2021**

## கனகசபாபதி கார்த்திகேசு

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கனடா மார்க்கத்தில் வசித்து வந்தவரும் இலங்கையில் ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகருமான கனகசபாபதி கார்த்திகேசு 28.02.2021 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார், தெற்கு அளவெட்டி கணபதிப்பிள்ளை கனகசபாபதி, திருநெல்வேலி வைரமுத்து பொன்னம்மா தம்பதிகளின் அருமை மூத்த மகனும், கொக்குவில் மேற்கு சோமசுந்தரம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமயோகத்தின் பிரியமான கணவரும், கனடா சொருபா மற்றும் கனடா நிருபா ஆகியவர்களின் பாசமிகு தந்தையாரும் கனடா வைரவநாதன் குகநாதன், கனடா பரம்சோதி சிவகுமார் ஆகியவர்களின் அன்பு மாமனாரும் கார்த்திகா அன்ரூ, வைதிகா, துவாரகா, ப்ரஜித, டன்யா ஆகியோரின பிரியமிகு தாத்தாவும், காசிநாதன் (கொழும்பு 'சாய் சங்கீதா' உரிமையாளர்), தெய்வநாயகி குலசேகரம் (லண்டன் வுட்போட் கிறீன்), நமநாதன் (யாழ். திருநெல்வேலி-சட்டத்தரணி), செல்வராணி வினாகேந்திரன் (சுவிஸ்லாந்து பேண்), ஜெயராணி இராஜரட்னம் (இலங்கை ஹட்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா மார்க்கத்தில் இன்று (03.03.2021) மாலை 4.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் திருநெல்வேலி அயலவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**55, பலாலி வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சட்டத்தரணி கனக நமநாதன்**
**தொடர்பு: 077 667 5080**

# 18வது பிறந்த நாள் நினைவும் 4ம் ஆண்டு நினைவஞ்சலியும்



மண்ணில் 14 • 02 • 2003



விண்ணில் 03 • 03 • 2017



## அமரர் தவத்துரை ஹரிஷன்

**(யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி தரம் 8 மாணவன்)**

ஆண்டுகள் நான்கு கடந்து போனாலும்
ஆறாது எம் துயரம்
அதிர்ந்து பேசியறியாத அன்பின் வடிவமே
பாசத்தின் உறைவிடமே
பண்பின் சிகரமே - என்றும்
புன்னகையோடு வலம் வந்த ஹரிஷ்குட்டியே
நீங்கள் வாழ்ந்த இடம் இப்போ
வனப்பிழந்து போய் விட்டதே
கண்ணிமைக்கும் பொழுதினில்
சடுதியாய் நீர் மறைவீர் என
எள்ளளவும் நாம் எண்ணவில்லை
IC வாட்டினுள் உம்மை கொண்டு
சென்ற போதும் - நாம்
நினைக்கவில்லை உம்மை இழப்போம் என
அம்மாவுக்கும் தங்கைக்கும் நான்தான்
ஆண்பிள்ளை காவல் என
அடிக்கடி சொல்வீர் இப்போது
எமக்கு யார் காவல் என
ஓடிச் சென்றீர்
அகவை 18 ஆனதும் நான் தான்
உங்களை மோட்டார் சைக்கிளில்
ஏற்றிச் செல்வேன் - அதுவரை தான்
நீங்கள் மோட்டார் சைக்கிள் ஓட வேண்டும்
என்று அடிக்கடி கூறுவீர் - இப்போ
அம்மாவை கண்ணீர் மழையில் நனையவிட்டு
எங்கு அவசரமாய் ஓடிச்சென்றீர்
அக்காம்மா, புச்சா, நீர், அம்மா, தங்கை என
ஐவரும் ஒன்றாக கூடி வாழ்ந்தோமே
இப்போ உமது தங்கை பவுன் கிளியையும்
உமது ஆசையம்மா நொன்நொன்னோவையையும்
தனிய விட்டுவிட்டு - நீங்கள்
மூன்று பேரும் ஒன்றாக கூடி விட்டீர்கள்
உம்மை மீண்டும் காண
மனம் துடியாய் துடிக்கிறது.
நாம் வாழும் வரை உம் துயரம்
எம்மை விட்டு அகலாது.

என்றும் உன் நினைவில் வாடும்

அப்பா, அம்மா, அன்புத் தங்கை, ஆசை மாமா, சிவா பெரியம்மா, மற்றும் மாமா, மாமி, மச்சாள், பெரியம்மா பெரியப்பா, அக்காமார், அண்ணா, மச்சான்மார், மருமக்களான ரஸ்வினா, சயன், அனுசாலி.

## வீடு வாடகைக்கு

செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு. வங்கி, பல்கலைக்கழகம் அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது (தரகர் தேவையில்லை)

**077 222 3132**


# அனுமதியற்ற கட்டடம் இடித்து அழிக்கப்படும்

## வலி. மேற்கு பிரதேச சபை தீர்மானம்

வலிகாமம், மார்ச் 3

வலி. மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் இடித்தழிக்கப்படும் என்ற தீர்மானம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானமானது நேற்றைய தினம் தொடக்கம் நடைமுறைக்கு வருமெனத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள இந்தத் தீர்மானமானது ஒன்றாயினும் இனிமேல் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும் என தவிசாளர் தெரிவித்தார்.

மேற்படி தீர்மானத்தை ஐ.தே.கட்சியின் உறுப்பினர் விஜிமருதன் முன்மொழிய சுயேட்சைக் குழு உறுப்பினர் கிருபாகரன் வழிமொழிந்தமை குறிப்பிடத்தக்கது. (ய)


## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்





திருமதி அபிராமி அசுபதிராஜ் (M.Ed)

திருமதி சிவஜா லம்போதரன் (M.Ed)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் கடந்த (25.02.2021) எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி அபிராமி அசுபதிராஜ், திருமதி சிவஜா லம்போதரன் ஆகியோர் கல்வியியல் முதுமாணி பட்டத்தினை பெற்றுக் கொண்டதையிட்டு மனநிறைவுடன் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**



## வேலையாள் தேவை

18 - 30 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்

**Lovely Flowers**
**No.277, K.K.S.Road,Jaffna**
**077 400 5023**

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இந்த வருடம் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால் வங்கிக் கணக்குகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. (ஐ)


# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



பிறப்பு 05-07-1940

இறப்பு 02-02-2021

கடந்த சார்வரி வருடம் தை மாதம் 20ம் நாள் (02.02.2021) செவ்வாய்க்கிழமை அபரபக்க ஷஷ்டி திதி அன்று சிவபதமடைந்த

அமரர்

**இராமசாமி குமரகுரு**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (04.03.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டி மடத்திலும், தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பர் சிட்டி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்



# AUSTRALIA AWARDS

Scholarship Award for
**POST GRADUATE STUDIES**
in Australia
Deadline for applications:
**30th April 2021**
https://australiaawardssrilanka.org/how-to-apply-2022/

# CANADA FUND FOR LOCAL INITIATIVES

Deadline for Concept Note:
**07th March 2021**
https://www.canadainternational.gc.ca/sri_lanka/highlights-faits/2021/2021-02-22-cfli-fcil.aspx?lang=eng

Please e-mail to: navam50@gmail.com



## யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்

### சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும் – 03.03.2021



திரு.தவபாக்கியநாதன் பத்மநாதன் (SLTS-1)
(பட்டதாரி சங்கீத ஆசிரியர்)

Best Wishes

**சேவைக்காலம் 14.08.1989 – 02.03.2021**

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 14.08.1989 - 31.12.1994 |
| யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | 01.01.1995 - 08.09.1998 |
| யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை | 09.09.1998 - 09.04.2002 |
| யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் | 10.04.2002 - 05.05.2005 |
| யா/வட்டு இந்துக் கல்லூரி | 06.05.2005 - 26.08.2007 |
| யா/சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | 27.08.2007 - 22.08.2013 |
| யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் | 23.08.2013 - 02.03.2021 |

இசையின் வித்தகரே. இணைபாட வல்லுநரே
சமய விழுமியப் பண்பாட்டாளரே. சமூக உறவுப் பாலமே
அதிபர், ஆசிரியர் குருநாதனே
மாணவர் மெழுகுவர்த்தியே
உபகாரப் பிரியரே
உம் பணியைப் பாராட்டி ஓய்வுக்காலம் சிறக்க,
கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

Best Wishes

Best Wishes

**வாழ்த்துவோர்**
**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,**
**யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்**



Baby Photo

உங்கள் மழலை செல்வங்களின் உயிரோவியமான புகைப்படங்களுக்கு

# பேபி போட்டோ

போட்டோ அன் வீடியோ
**BABY PHOTO &VIDEO**



கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்




அங்கீகாரம் பெற்றவர்
(ONLINE SMART e.NIC) தேசிய அடையாள அட்டை
(ONLINE PASSPORT) ஒன்லைன் பாஸ்போட்

91.பலாலி வீதி. திருநெல்வேலி 021 222 6912 .. 0761419308

# தேவை

## யாழ்ப்பாணத்தில் இயங்கும் Digital Printing Centre ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

*வரவேற்பாளர்
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
- 21 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- Ms Office & Computer Knowledge தெரிந்திருத்தல்
- தமிழ், ஆங்கிலம் உட்பட் - சிங்களம் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

*** கணக்காளர் (உதவியாளர்)**
- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- கணனி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

*** Digital Printing Machine Operator**
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- Digital Printer Machine இயக்கக் கூடியவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்
- பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

*** Graphic Designer**
- Adobe Photoshop
- Coral Draw
- Adobe Illustrator
- Adobe Dreamweaver

மேற்குறிப்பிட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**மேலதிக தகைமைகள்**
- Adobe Flash .
- Adobe Premier
- Autodesk 3D Max. Studio


*** Marketing Field Staff**
- ஆண்கள் விண்ணப்பிக்கலாம்
- முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது **சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 12.03.2021** இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட **மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.**

மின்னஞ்சல் முகவரி : jobdocumentsbsa@yahoo.com


# துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 27 . 09 . 1934



மறைவு 01 . 03 . 2021

## அமரர் பி.தங்கமுத்து


நண்பரின் தந்தையார் (யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் Dr. சத்தியமூர்த்தி அவர்களின் தந்தையார்) பி. தங்கமுத்து நேற்று முன்தினம் காலமானார்.

அன்னார் காலமான செய்தியை அறிந்து மிகுந்த மனவருத்தம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**உரிமையாளர், ஊழியர்கள்**
**சாரங்கா நகைமாடம்**
**151/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



"கலாபூஷணம்"

## சின்னத்துரை சண்முகராஜா (ஷண்)

**(மூத்த ஊடகவியலாளர்)**

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாரகன்பிட்டிய அண்டசன் தொடர்மாடிக் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகராஜா நேற்று (02.03.2021) செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னத்துரை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ம.ராஜரட்ணம், விசாலாட்சியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், ச. பாக்கியவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சி.பத்மாவதி மற்றும் சி.தர்மராஜா, காலஞ்சென்ற சி.ஜீவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் த.மோகனாம்பாள் காலஞ்சென்றவர்களான ஜீ.அக்னஸ், யோ.மனோன்மணி, க.இராஜேஸ்வரி, ரா.ரட்ணதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr. சாந்தினி (USA), சுதர்சன் (பொறியியலாளர், USA), கனகேஸ்வரன் (பொறியியலாளர்- UK) ஆகியோரின் சிறியதந்தையும், த. செந்தில்குமரன் (ஆசிரியர்) த.நந்தகுமரன் (பொறியியலாளர் -S.L.T) த. உமையாள் (காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்), மாரிசுகத், ரஜனி அமில, ஜீ.பிரதீப் (ரஞ்சன்), காஞ்சனா ஏரல் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சி. தர்மராஜா (தம்பி)**
**(தர்மா)**
**021 222 7761, 077 123 5646**

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1937



மறைவு 02 . 03 . 2021

## ஆறுமுகம் துரைசிங்கம்

**(முன்னாள் தூர்க்கா பேக்கரி உரிமையாளர்)**

வடமராட்சி ஊரிக்காடு மயிலியதனையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கு, நீர்வேலியை வதிவிடமாகவும், கிளிநொச்சி திருவையாறு இரண்டாம் பகுதியில் வசித்தவருமாகிய ஆறுமுகம் துரைசிங்கம் நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னம்மா தம்பதியினரின் புத்திரனும், நீர்வேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நல்லம்மா தம்பதியினரின் மருமகனும், கமலேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், கிருபாகரன் (பிரதேச சபை- அச்சுவேலி), அமரர் சுதிகரன், சசிகரன், சசிகலா, அரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சபாரத்தினம், அழகுதுரை, தனபாலசிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, குமுதினி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், சயித்தா, நிதர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும், பகவத்சிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சிவகுரு, தங்கமுத்து, செல்லம்மா, அலங்காரம், யோகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.03.2021) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்ககாக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இரணைதீவில்....

முஸ்லிம்களின் மையவாடிகளில் அவற்றை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை குறிப்பாக முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவு தெரிவு செய்யப்பட்டுள்ளது என அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இது தொடர்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

**கூட்டமைப்பு**

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் சகோதரர்களின் ஜனாஸாக்களை கிளிநொச்சி -இரணைதீவில் அடக்கம் செய்ய அரசு எடுத்துள்ள தீர்மானம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இது தமிழ் முஸ்லிம் உறவைப் பிரிக்க அரசால் அரங்கேற்றப்படவுள்ள சதித்திட்டம். கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் சகோதரர்களின் ஜனாஸாக்களை அவர்களின் சொந்த இடங்களிலுள்ள மையவாடிகளில் அடக்கம் செய்ய அரசு தயங்குவது ஏன் எனவும் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

முஸ்லிம் சகோதரர்களின் ஜனாஸாக்களுக்கு மதிப்பளித்து அவற்றை அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள மையவாடிகளில் அடக்கம் செய்ய அரசு முன்வர வேண்டும் எனவும், முஸ்லிம் சகோதர்களின் விருப்பமும் அதுவே எனவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

**ஹக்கீம்**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கிளிநொச்சி- இரணைதீவில் கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் தீர்மானம் இனப்பாகுபாட்டை ஏற்படுத்தும். இந்த விடயத்தில் ஏற்கனவே அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாடு சரியானது என்று நிரூபிப்பதற்கான முயற்சியாகவே இது அமைகின்றது என்றார்.

**ரிஷாட்**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. முஸ்லிம்களின் அந்தந்த மையவாடிகளில் அவற்றை அடக்கம் செய்யவேண்டும். முஸ்லிம்கள் உயிரோடு இருக்கும் போதும் உரிமைகளை வழங்கவில்லை. உயிரிழந்த பின்னரும் உரிமைகளை வழங்கவில்லை -என்றார்.

**மனோ**

இந்த விடயம் குறித்து முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஒரே கல்லில் இரண்டுக்கு மேற்பட்ட மாங்காய்களை அடிக்கவே, இரணைதீவைத் தெரிவு செய்துள்ளார்கள். தமிழ் பேசும் மக்கள் நிதானமாக இதை அணுக வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ5,22)

## தொற்றாளர்களின்...

வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது, கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ள நிலையில் வழிகாட்டல் அறிக்கை எப்போது வெளியாகும் என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

'வழிகாட்டல் அறிக்கை இன்று (நேற்று) வெளியிடப்படும். இரணைதீவு என்பது தீவுப் பகுதியாகும். அங்கு சுகாதார நடைமுறைகள் மற்றும் விஞ்ஞான அணுகுமுறைகளைப் பின்பற்றி சடலங்கள் அடக்கம் செய்யப்படும். இது தொழில்நுட்பக்குழு எடுத்த முடிவாகும். அரசியல் ரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. இரணைதீவுக்கு உடல்களைக் கொண்டு செல்வதற்கான அனைத்துச் செலவீனங்களையும் அரசே பொறுப்பேற்கும்' என்று கெஹெலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (ஒ,44)

## ஆசிரியைகள்...

வர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 292 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 6 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 5 பேர் நவாலியில் தொற்றுக்குள்ளான ஆசிரியையுடன் தொடர்புடையவர்கள். இந்த ஐவரில் இருவர் முல்லைத்தீவுக்குச் சென்று வரும் சக ஆசிரியர்கள். மற்றைய தொற்றாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சக மாணவன்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 442 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் கொடிகாமத்தைச் சேர்ந்தவர். இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தவர்கள். (ம-26)

## கொடிகாமம்...

றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

கொடிகாமம் பகுதியில் கொரோனாப் பெருந்தொற்று அச்சம் நிலவுகின்றது என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அங்கு விரைவில் எழுமாற்றுப் பரிசோதனைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு நேற்று முன்தினம் மேற்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 64 பேரிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டதில் வர்த்தகர் ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-26,9,159)

## ஐ.நா.வின்....

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைப் படையினருக்கு எதிரான வெளிநாட்டு விசாரணைகளைத் தடுப்பதற்கும், அவர்களுக்கு சட்ட ரீதியாக பாதுகாப்பை வழங்குவதற்கும் தேவையான விசேட சட்டங்களை இயற்றுவதற்கு இலங்கை அரசு தயாராகவே உள்ளது என்று கல்வி அமைச்சரும் சட்டத்துறை நிபுணருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீது பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு தொடர்பிலும், நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழர்களின் நிலைப்பாடு குறித்தும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினரைக் காப்பாற்ற இலங்கை அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் விரிவான அறிக்கையொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் வெளியிடவுள்ளது. தமிழர்கள்மீது இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும்,

குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். சர்வதேசமும் இந்த விடயத்தில் இருந்து ஒருபோதும் விலகக்கூடாது -என்றார். (ஒ,5,22)

## விபத்தில்...

வரே இவ்வாறு உயிரிழந்தார்.

இலுப்பையடிப்பகுதியில் நின்றிருந்த முதியவர், வீதியைக் கடக்கமுற்பட்ட போது பூந்தோட்டம் பகுதியில் இருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள், முதியவரை மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்த முச்சக்கர வண்டிச் சாரதிகளால் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்தார். (ப-110)

## நீதிவேண்டி....

நல்லூர் நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் மக்கள் திரள் திரளாகச் சென்று, தங்களுடைய ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுக் காலை நல்லூருக்கு வந்து குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதனூடாக இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்துக்கு எதிராக இன அழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும், தமிழ் இனத்தின் மீதான இன அழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மூன்றாவது நாளாக நல்லூரில் போராட்டம் இடம் பெற்றது. (ப-20)

## 8 மாதக்...

டுள்ளார். நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு நேற்றுக் காலை சென்று அவரைக் கைதுசெய்தனர். விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. திருகோணமலையிருந்து ஒரு மாதத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து வாடகை வீட்டில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. தாய் குழந்தையைத் தாக்கும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

அதில், தாய் ஒருவர் தனது பச்சிளம் குழந்தையைத் தடி ஒன்றால் மிக மோசமாக அடிக்கின்றார். அது வீரிட்டு அழுகின்றது. பின்னர் குழந்தையின் ஒரு கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் செல்கின்றார். அப்போதும் குழந்தை வீரிட்டு அழுகின்றது. அறை ஒன்றினுள் குழந்தையைப் போட்டு அங்கும் தடியால் அடிக்கின்றார். வலி தாங்க முடியாமல் வீரிட்டு அழுத குழந்தை உருண்டு பிரண்டு மெதுவாக தத்தி தத்தி நடந்து தப்பிக்க முயற்சிக்கின் றது.

இந்தக் காணொலி நேற்றுமுன்தினம் இரவு சமூக வலைத்தளங்களில் அதிகமானோரால் பகிரப்பட்டது. அதன் அடிப்படையில் உரிய தரப்புகளுக்கு முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து நேற்றுக் காலை துரித நடவடிக்கை யில் இறங்கிய பொலிஸார், கிராம அலு வலர் மற்றும் குடும்பநல மருத்துவ மாது ஆகியோருடன் குறித்த வீட்டுக்குச் நேரில் சென்றனர்.

தாய் தனது 8 மாதக் குழந்தையை தூக்கி வைத்துக்கொண்டு பொலிஸாரின் விசாரணைக்கு முகம் கொடுத்தார். பின்னர் பொலிஸார், தாயிடமிருந்து குழந்தையைப் பெற்றனர். அதன் பின்னர் அவரை மேலதிக விசாரணைகளுக்காக அழைத்துச் சென்றனர்.

இதேவேளை குழந்தையின் பிறப்புத் தொடர்பான ஆவணங்களோ, குறித்த தாயை அடையாளப்படுத்தும் ஆவணங்களோ அவர்களிடம் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 8 மாதக் குழந்தை என்று தாய் கூறியதன் அடிப்படையிலேயே வாக்கு மூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், அவர் விசாரணைகளின்போது முன்னுக்குப் பின் முரணாக தகவல்களைக் கூறினார் என்றும் அறிய முடிகின்றது. (ஒ,ப,26,159)

## மூத்த...

உயிரிழந்தார். ஏறத்தாழ 55 வருடங்கள் தொடர்ச்சியாக ஊடகத்துறையில் பணியாற்றியிருந்த ஊடகவியலாளர் ஷண், கடந்த சில வாரங்களாக சுகவீனமுற்றிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

1964ஆம் ஆண்டு ராதா சஞ்சிகை ஊடாகத் தனது ஊடகப் பணியை ஆரம்பித்த பத்திரிகையாளர் ஷண் கலை, இலக்கியம், சினிமாத்துறை மற்றும் தமிழக அரசியல் எனப் பல்வேறு பரிணாமங்களில் தனது பணியை ஆற்றி வந்தார். தினபதி, சிந்தாமணி மற்றும் சூடாமணி ஆகிய பத்திரிகைகளிலும் ஷண் பணியாற்றியுள்ளார். உதயனிலும் அவரின் பத்தி எழுத்துக்கள் வெளியாகியிருந்தன.

ஊடகவியலாளர் சண்முகராஜாவின் ஊடகப்பணியைப் பாராட்டி, 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் மாநாட்டில், இவர் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் கலாபூஷணம் அரச விருதும் அவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈழத் தமிழர்கள் என்றும் பாண்டியனை மறக்கார்

## சட்டத்தரணி சிறீகாந்தா இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச். 3

இந்திய கம்யூனிஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல தொழிற்சங்கவாதியும், ஆற்றல்மிக்க பேச்சாளரும், எழுத்தாளருமான தா.பாண்டியன் இயற்கை எய்திய செய்தி அவரை அறிந்திருந்த அனைத்து இலங்கைத் தமிழ் மக்களுக்கும் கவலை அளித்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

பாண்டியனின் மறைவு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பாண்டியன், இலங்கைத் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து காட்டி வந்த பரிவும் பாசமும் மறக்க முடியாதவை. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நிகழ்ந்த நீண்ட நெடும் போரின் இறுதிக் கட்டத்தில், 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி, மகாத்மா காந்தியின் பிறந்தநாளில் பாண்டியனின் அறைகூவலோடு தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சி உண்ணாவிரதப் போராட்டமே, ஒட்டுமொத்த தமிழ் நாட்டையும் போர் நிறுத்தக் கோரிக்கையின் பின்னால் அணிதிரள வைத்தது என்பதனை நாம் அனைவரும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

நீதி கோரி நிற்கும் எமது மக்களை தனது உற்றாரும் உறவினருமாகக் கருதி அவர் நேசித்ததை எங்களில் சிலர் நேரடியாகவே நன்கறிவோம்.

மனித நேயம்மிக்க உயர்ந்த பண்பாளராகவும், துணிச்சல் மிக்க அரசியல் போராளியாகவும் வாழ்ந்து மறைந்த பாண்டியனின் கம்பீரக் குரல் ஈழத்து மண்ணில் இனிய இலக்கியச் சுவையோடு ஆழமான அரசியல் சிந்தனைகளையும் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே எமது மக்களுக்குச் சொல்லிச் சென்றதையும் இன்று நினைத்துப் பார்க்கின்றோம். அந்த செந்தமிழன் இன்று எம் மத்தியில் இல்லை என்றுள்ளது. (ப)

**விற்பனைக்கு**

யாழ் முள்ளானை சிவன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீடும் 7 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
(இளவாலை பிரதான வீதியிலிருந்து 500m)
தொடர்புக்கு
075 477 7063, 077 525 9961

**யாழ் மாவை கலட்டி பாற்சாலை, கீரிமலை பண்ணையாளரின் நலன்கருதி பால் விலை மாற்றம் பற்றிய அறிவித்தல்**

1 லீற்றர் கொள்விலை ரூபா 80.00
1 லீற்றர் விற்கும் விலை ரூபா 100.00
இவ்விலை மாற்றம் 01.03.2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
கொள்முதல் செய்யும் இடங்கள்
மாவை கலட்டி, கீரிமலை
யூனியன் அருகாமை, சங்கானை.
முகாமையாளர்
மாவை கலட்டி பாற்சாலை.
077 836 4858

**தேவை**




பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள EOS 5D Mark (I, II, III, IV) கமராக்கள் தேவை.
தொடர்பு: 076 737 4444

**காணி விற்பனைக்கு**

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு) (2பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்) பருத்தித்துறை வீதியில் இருந்து 40m நடைதூரம்.
(தரகர் தேவையில்லை)
077 596 3845, 076 640 0974

**காணி விற்பனை**

உரும்பிராய் பொக்கனை வீதியில் முருகன் கோவில் முன்பாக 10 பரப்புக் காணி விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். பலாலி வீதியிலிருந்து 500 m தூரம்.
தரகர் தேவையில்லை.
தொடர்பு:
077 6234 204
077 505 8561

**காணிகள் தேவை**

யாழ் பகுதிகள், நல்லூர், கோப்பாய், நவாலி, மானிப்பாய், மணியந்தோட்டம் போன்ற பகுதிகளில் 10இற்கு மேற்பட்ட பரப்பளவுடைய காணிகள் தேவை
இராசபாதை வீதி
தொடர்பு
076 723 8668

**HARI ENGINEERS & CONTRACTORS**

**POST OF TECHNICAL OFFICER**

Educational & other qualifications

* Relevant Diploma or Degree in any Government Organization or Private Sector.
* Minimum 2Years Experienced With recognized Contraction companies [Not Trainees]
* Have a Valid Driving Licence &Motorbike.
* Should Have the Commanding skill.

Terms of Employment

* The Post Will be on contract basis, initially for the period of two years. Extension could be considered based on performance.
* Salary Negotiable.
* Age Limit 25-40[Any gender]

If you are qualified send your CV to
hariengineering108@gmail.com
or send your CV under registered covers stated "Application for the post of technical officer" Written on the top left hand corner of the envelope to


Hari Engineering
Puthuththoddam, Alvai South, Alvai.
On or before 15.03.2021

[Further Question Contact-077 2830694 or 0212261400]

Managing Director

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 - 09 - 1934



மறைவு
01 - 03 - 2021

### திரு. பிச்சன் தங்கமுத்து

கிளிநொச்சி பெரியபரந்தனை நிரந்தர வதிவிடமாகவும் குருமன்காடு வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிச்சன் தங்கமுத்து அவர்கள் 01.03.2021 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பேச்சியம்மாவின் அன்புக்கணவரும் புஸ்பவள்ளி காலஞ்சென்ற சந்திரசேகரர், சண்முகம் (பொறியியலாளர்) வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை) வைத்தியர் கோணேஸ்வரன் (S.T Medi clinic குருமன்காடு), பாலமுரளி (போசாக்கு ஆலோசகர் - CIC) ஆகியோரின் அன்பு தந்தையும் தர்மலிங்கம், தர்சினி, சுஜாதா, நிலூசா, ரேணுகா (R.D.H.S அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், தவபாலன், வினோதன், பிரபாகரன், செந்தூரன், துஷ்யந்தன், கவின், சகானா, வருணன், சுருதி, அகரன், சுவித்தனன், சுவித்தனா, சுகிர்த்தனன், துளசி, மிதுன் ஆகியோரின் பேரனும் விதுசாளினி, நோமிசன், வைஷ்ணவி, லதுசன், மாதுறன், அபிரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா இல 11A - UC குவாட்டஸ் குருமன்காடு இல்லத்தில் 02.03.2021 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அன்னாரது பூதவுடல் கிளிநொச்சி செல்வாநகர் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இன்று (03.03.2021) புதன்கிழமை ஈமக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணி அளவில் கிளிநொச்சி ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு தகன கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

TeL : + 94 77 066 2825 Shan
: + 94 77 229 5656 Konesh
: + 94 77 346 5968 Bala

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர்
த.சத்தியமூர்த்தி அவர்களின் தந்தை

### பி.தங்கமுத்து

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும், பணியாளர்களும்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.